MR. SPEAKER : The question is—

That leave be granted for the introduction of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari), Estates Land (Reduction of Rent) and Estates (Supplementary) (Amendment) Bill, 1958.

The motion was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS PANCHAYATS BILL, 1958 (L.A. BILL NO. 33 OF 1958)—*cont.*

Clause 2.

MR. SPEAKER : There are a number of amendments to this clause. Hon. Members will move their amendments.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

For item (28), *substitute* the following, namely :—

'(28) A person is deemed to have his residence, if he permanently resides in any house '.

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

In clause 2—

(i) in sub-clause (21), *for* ' under section 9 ' *substitute* the words ' under this Act '.

(ii) in sub-clause (32) *for* ' under section 9 ' sub-section (1), clause (*a*) ', *substitute* the words ' under this Act '.

(iii) in sub-clause (34) (*b*), *omit* the word ' and ' occurring at the end.

(iv) in sub-clause (34) (*c*), *add* the word ' and ' at the end.

I also move—

10-10 a.m. (i) *for* sub-clause (9), *substitute* the following sub-clause :—

" (9) ' executive authority ' means, in the case of a town panchayat, the executive officer and in the case of a village panchayat, the president."

(ii) in sub-clause (10), *for* the words ' a panchayat ', *substitute* the words ' a town panchayat '.

(iii) in sub-clause (31), *omit* ' and over which a town panchayat has jurisdiction.'

(iv) in sub-clause (34), *omit* ' and over which a village panchayat has jurisdiction ' and *add* the following at the end :—

" (*d*) the townships constituted under the Mettur Township Act, 1940 (Madras Act XI of 1940), the Courtallam Township Act, 1954 (Madras Act XVI of 1954) and the Bhavanisagar Township Act, 1954 (Madras Act XXV of 1954) ".

25th September 1958]

SRI A. GOVINDASAMY : நெய்வேலியையும் இதிலே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : இங்கே கொடுத்திருக்கக்கூடிய definition-ல் சரியாக விளக்கம் கொடுக்கப்படவில்லை. சப்க்ளாஸ் (28) என்ன சொல்லுகிறது என்றால் :

" (28) A person is deemed to have his residence or to 'reside' in any house if he sometimes uses any portion thereof as a sleeping apartment . . ."

வாரத்திலே எதாவது ஒரு நாளோ அல்லது சில நாட்களோ ஒரு இடத்தை உபயோகித்தால் அது வீடு என்று சொல்லப்படுகிறது. அது சரியாக இல்லை. இன்கம்டாக்ஸ் சட்டத்தில் விரிவாக இருக்கிறது. அதன்படியிருந்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I am sorry I am unable to accept the amendment moved by Sri N. K. Palanisami. This is a definition which is being used for purposes of defining the residence of a person particularly for electoral roll purposes. So, whatever may be the wording used in the Income-tax Act, we have to follow the same wording used here with regard to the person's name being found in the electoral rolls for being eligible for certain elective posts. I am therefore sorry I cannot accept the amendment.

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

The Government amendments were put and carried.

Clause 2, as amended, was put, and carried.

Clause 3.

MR. SPEAKER : The motion is :—

" That clause 3 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I think in view of the consolidated Government amendment which I will be moving just now, the hon. Member Sri S. Lazar need not move his amendment. I move—

(i) *For* sub-clause (1) *substitute* the following sub-clause :

" (1) The Inspector shall by notification—

(*a*) classify and declare every local area comprising a revenue village or villages or any portion of a revenue village or contiguous portions of two or more revenue villages and having a population estimated at not less than five thousand and an annual income estimated at not less than ten thousand rupees as a panchayat town for the purpose of this Act;

(*b*) classify and declare every other local area comprising a revenue village or villages or any portion of a revenue village or contiguous portions of two or more revenue villages with a population estimated at not less than five hundred as a panchayat village for the purpose of this Act; and

(*c*) specify the name of such panchayat town or panchayat village ";

(ii) in sub-clause (2) (*c*), *for* the words "in the vicinity thereof" *substitute* contiguous thereto" and after the word 'cancel" insert "or modify".

(iii) *after* sub-clause (2) *add* the following :—

"(3) Any rate-payer or inhabitant of such area or any panchayat concerned may, if he or it objects to any notification under sub-section (1) or sub-section (2), appeal to the Government within such period as may be prescribed";

(iv) *renumber* sub-clause (3) as sub-clause (4).

SRI S. LAZAR : Now that the Hon. Minister has moved a consolidated amendment. I am not moving my amendment, Sir.

SRI A. GOVINDASAMY : I move—

In sub-clause 1 (*a*) of the Government Amendment *omit* the words "any portion of a revenue village"

சர்க்கார் கொடுத்திருக்கும் திருத்தத்திலே "Any portion of a revenue village" என்று இருக்கிறது. அந்த வாசகத்தை எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு தொகுதியிலுள்ள ஒரு பகுதியை மட்டும் சேர்ப்பதினால் பல இடையூறுகள் ஏற்படும். அடிக்கடி லோகல் போர்டு இன்ஸ்பெக்டருக்கு "ரெபர்" பண்ணவேண்டியிருக்கும். மேலும், கிராமத்திலே பல தொந்தரவுகள் ஏற்படும். ஏற்கெனவே இருக்கிற பஞ்சாயத்தைக் கலைத்துவிடுவதினால் பல சங்கடங்கள் ஏற்படும். ஆகவே "Any portion of a revenue village என்ற வாசகத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்".

SRI M. P. SUBRAMANIAM : I second the amendment.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே "வில்லேஜ்" என்று சொன்னால் ரெவன்யூ வில்லேஜைக் குறிக்கிறது. அது பல கிராமங்கள் சேர்ந்ததாக இருக்கலாம். ஆகையால் ஒரு பகுதியை இந்த தாய் கிராமத்திலிருந்து தூரமாக இருக்கக்கூடியதாக இருந்தால், பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமத்திலே சேர்த்து பஞ்சாயத்து அமைப்பதற்கு சௌகரியம் இருந்தால், அத்துடன் சேர்க்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு கஷ்டங்கள் ஏற்படுமா என்பதைப் பரிசீலனை செய்துதான் முடிவு செய்யப்படும். கனம் கோவிந்தசாமி சொல்லும் திருத்தம் அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

The amendment of Sri A. Govindasamy was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 4.

MR. SPEAKER : The motion is—

"That clause 4 *do* stand part of the Bill."

SRI A. GOVINDASAMY : Sir, I move—

"In item (iii) of sub-clause (3) *omit* the words 'or appointed'."

SRI M. P. SUBRAMANIAM : I second the amendment, Sir.

25th September 1958]

SRI P. S. CHINNADURAI : Sir, I move—

" In sub-clause (1) *omit* the words ' and industrial, labour or institutional colony ' or occurring in line 31 ".

" In sub-clause (3)—

(*a*) in item (ii), *omit* the words ' the persons who shall be members of the township committee or ';

(*b*) in item (iii), *omit* the words ' the person who shall be the Chairman of the township committee or '."

The amendments were duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

(i) *for* sub-clause (1), *substitute* the following :—

" (i) The Government may, if a specific motion is passed to that effect by both Houses of the Legislature, declare any village or town or any specified part thereof to be a township if it is an industrial, labour or institutional colony or a health resort ";

(ii) in sub-clause (3) (iv) *for* the word ' chairman ' *substitute* the words ' the chairman '.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI P. S. CHINNADURAI : தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் அவசர அவசரமாக வரும் திருத்த மசோதாக்களில், சில ஷரத்துக்களைப் போட்டிருப்பார்கள். அப்பொழுதெல்லாம், விரிவான பஞ்சாயத்து மசோதா வரும்போது அதை சரி செய்து கொள்ளலாம் என்பார்கள். ஆனால் இப்பொழுது வந்திருக்கும் விரிவான பஞ்சாயத்து மசோதாவில் கூட அதேமாதிரியான ஷரத்துக்களை நான் எதிர்பார்க்க வில்லை, விட்டுவிடுவார்கள் என்று நினைத்தேன். ஆனால், அவ்வாறு சர்க்கார் செய்யாத காரணத்தால், இந்த திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன். 10–20 a.m.

ஆரோக்கிய விடுதி என்ற முறையிலே, கொடைக்கானல், உதகமண்டலம் போன்ற இடங்களை பஞ்சாயத்து ஏரியா என்றோ, நகரசபை என்றோ எடுத்துக்கொண்டால், அப்படி அதைப் பரிபாலனம் செய்வதற்காகச் செய்தால் அர்த்தம் உண்டு. அது அவசியம் என்று கூடச் சொல்லலாம். இது அப்படியல்ல. முதலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிற, தொழிலாளர் காலனிப் பகுதியை பிரித்து ஒரு டௌன்ஷிப் கமிட்டி ஏற்படுத்துவது என்பது சரியல்ல. முதலாளிகளுக்குத்தான் இதுசாதக மாக இருக்கும். ஆனால், இந்த சாதகத்தை முதலாளிகள் விரும்ப வில்லை. அவர்களே விரும்பாத போது, சர்க்காரே 'என் இதைச் செய்ய வேண்டும் என்று கேட்கிறேன். அவர்களுக்கு சாதகமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு சர்க்கார் அந்தப் பகுதிகளை நீக்கி வைக்க இந்த ஏற்பாடு செய்ய வேண்டுமா என்று சிந்திக்க வேண்டும். அதன் அவசியத்தை நான் சந்தேகிக்கிறேன்.

கோவைப் பகுதியில் மிகப் பெரிய பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஏராளமான வருமானம் வருகிறது. அப்படிப் பிரிக்கப் பட்டால் அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் பெரும்பாலும் குறைந்து விடும். அந்தப் பஞ்சாயத்துக்களுடைய நிர்வாகம் பாதிக்கப் படும். இதை எந்த முதலாளிகளும் விரும்புவதாகத் தெரியவில்லை. ஏற்கனவே சொல்லிய மாதிரி, மதுக்கரை ஸிமெண்ட் பாக்டரி முதலாளி தான் பஞ்சாயத்து ஏற்படுவதை ஆட்சேபித்தார்கள். ஒரு நபரை திருப்தி செய்வதற்காக, அங்கே செய்யப்பட்ட காரியங்களின் விளைவால் இன்று வரை அங்கே பஞ்சாயத்தே அமைக்கப் படவில்லை என்கிற கேவலமான

நிலைமை அங்கே இருக்கிறது. ஆகவே, வேறு முதலாளிகள் யாரும் இதை விரும்புவதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த ஷரத்தை நீக்கிவிட வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

எனது இரண்டாவது தீர்மானம் பற்றி அதிகமாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. எல்லாவற்றிற்குமே தேர்தல் முறையைக் கையாள வேண்டும் என்பதுதான் என் அவா. ஆகவே இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகமாகப் பேசுவதனால், அதிக பயன் கிட்டாது என்பதனால், என் உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பயன் இல்லை, பயன் கிடையாது என்ற சொல்லை இங்கே உபயோகிக்கலாமா ?

SRI P. S. CHINNADURAI : நான் ஏற்கனவே சொல்லியது மாதிரி, திருத்தத்தை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், இந்த ஒரு சொல்லே போதுமானது. இல்லையென்றால், ஒரு மணி முழங்கினாலும் பிரயோசனம் இல்லை என்ற ஆசாபங்கத்தினால் தான் சொன்னேன்.

MR. SPEAKER : The clarification is all right. (Laughter.)

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, அபிஷியல்களைப் போடாமல், நான் அபிஷியல்களைத் தேர்ந்தெடுக்கும் முறை அமைய வேண்டு என்றே இதைக் கொடுத்திருக்கிறேன். இதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : ஐயா, இந்தப் பகுதியில், இண்டஸ்ட்ரியல், லேபர், ஹெல்த் ரிஸார்ட் போன்ற இடங்களில் டௌன்ஷிப் கமிட்டிகள் அமைக்க வேண்டும் என்பது சரியல்ல. அம்மாதிரி, கமிட்டிகள் ஏற்பட்டால், மற்ற பகுதி மக்களுக்கு ஜனநாயக முறைப்படி கிடைக்கும் பஞ்சாயத்து நடத்தக்கூடிய உரிமை பாதிக்கப்படுகிறது. இது அரசாங்கத்தின் கொள்கையளவிலே சரியல்ல. அப்படி, நெய்வேலி போன்ற இடங்களில் டௌன்ஷிப் கமிட்டிகள் ஏற்படுமானால், பல ஆயிரக் கணக்கான மக்கள் ஜனநாயக உரிமையற்றுப் போய்விடுவார்கள். ஆகவே, இந்த நிலை வருங்காலத்தில், அரசாங்கத்தின் கொள்கையளவில் இருக்கக் கூடாது என்று கூறிக் கொள்ளுகிறேன்.

SRI M. S. SELVARAJAN : நான் சர்க்காரின் உத்தேச திருத்தத்தை ஆதரிக்கிறேன். சாதாரணமாக நாம் கொடுக்கும் மானியங்கள் தவிர, மத்திய சர்க்காரிலிருந்து தொழில் துறைக்கு விசேஷ மானியங்கள் வாங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. என்னைப் பொறுத்த வரையில், இந்த ஏற்பாட்டை அரசாங்கம் நல்ல கருத்தோடுதான் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதில், பில்க்ரிம் ஏரியாக்களையும் சேர்த்துக் கொள்வது தவறு என்று அரசாங்கம் யோசிக்கவேண்டும் என்று நினைக்கிறேன். பில்க்ரிம் டாக்ஸ் வாங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். ஆகவே இதையும் அரசாங்கம் யோசித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த ஏற்பாட்டை வரவேற்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபா நாயகர் அவர்களே, இப்பொழுது சர்க்கார் கொடுத்திருக்கக் கூடிய திருத்தத்தின் பிரகாரம், எந்தப் பகுதியை டௌன்ஷிப்பாக அமைப்பதானாலும், அந்த ஏற்பாடு, இந்த சபை முன்பும், மேல்சபை முன்பும் வைக்கப்பட்டு, அவர்களின் சம்மதத்தைப் பெற்றபின் தான் அந்த பகுதியில் டௌன்ஷிப் கமிட்டி அமைக்கப்படும். இதைத் தெரிந்து கொண்டால், கனம் சின்னதுரை வாதமும், இது கூடாது என்று சொன்ன மற்றவர்கள் வாதமும் பொருந்தாது என்பது தெரியவரும். இண்டஸ்ட்ரியல் காலனியாக இருந்தாலும் சரி, லேபர் காலனியாக இருந்தாலும் சரி, தனிப்பட்ட முதலாளிகள் ஒரு புறம் இருக்க, சர்க்காரே பல இண்டஸ்ட்ரியல் காலனிகளை ஏற்பாடு செய்து வருகிறார்கள். உதாரணமாக, நெய்வேலியை எடுத்துக் கொண்டால், நெய்வேலியை ஒட்டி, லிக்னைட் கார்ப்பரேஷன், பல ஜாகைகளை கட்டி

25th September 1958] [Sri C. Subramaniam]

வருகிறார்கள். ஒரு சிறு நகரமே அங்கு ஏற்பாடாகும். அதற்கான எல்லாவிதமான வசதிகளும் செய்ய லிக்னைட் கார்ப்பரேஷனே செலவுகளை ஏற்றுக் கொண்டு ரோட், தண்ணீர் வசதி, விளக்கு வசதி, சுகாதார வசதி போன்ற பல வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். சர்க்காரே பல காலனிகளை அமைக்கிறார்கள். நெசவாளர்களுக்காக, மற்ற தொழிலாளிகளுக்காக காலனிகள் அமைக்கிறோம். அந்தக் காலனிகளில், மற்ற கிராமங்கள் போல் இல்லாமல், எல்லா வசதிகளையும் பல்வேறு நிதிகளையும், உதவிகளையும் வைத்துக் கொண்டு ஏற்பாடு செய்யப்படுகிறது.

அதே மாதிரிதான் இண்டஸ்ட்ரியல் காலனி, இண்டிஸ்ட்ரியல் லேபர் காலனி அவைகளுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறது. கிராமங்களுக்கு எந்த அளவு வசதிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ அந்த அளவுக்கு இங்கேயும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. லேபர் காலனி, கைத்தொழில் அல்லது தொழிலாளர் பேட்டையாக இருந்தால் அங்கே ஏற்கெனவே பல வசதிகளை சட்ட பூர்வமாகச் செய்து கொடுத்திருக்கிறோம். இப்பொழுது பஞ்சாயத்து சர்க்கார் ஏற்படும் போது மற்ற எல்லா இடங்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று சட்ட பூர்வமாக ஆகும்போது இப்படிப்பட்ட டவுன்ஷிப்புகளுக்கும் நிதி ஒதுக்க வேண்டியதாக இருக்கும். ஏற்கெனவே உள்ள சட்டப்படி அவர்களுக்கு ஒதுக்கி வைத்து இருப்பதுடன் இந்த சட்டத்தின் பிரகாரமும் அந்த இடங்களுக்கு ஒதுக்க வேண்டியதாக இருக்கும். அப்படி ஒதுக்கினால் இந்த இடங்களுக்கு அதிகப்படியாக வசதி செய்து கொடுக்கப்படுவதாக ஆகிவிடும். ஏற்கெனவேயே ஓரளவு வசதிகள் ஏற்பட்டிருக்கக்கூடிய இடங்களுக்கு மறுபடியும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால் அப்படிப்பட்ட இடங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற பகுதிகளுக்குக் கொடுக்கப்படும் வசதிகளையே இங்கும் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் பகுதிகளை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக எல்லா பகுதிகளுக்கும் வசதிகள் செய்யப்படும்போது ஏற்கெனவே சட்ட பூர்வமாக வசதிகளை பெற்றிருக்கக்கூடிய பகுதிகளும் வசதி பெறக் கூடாது என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே வசதிகள் இல்லாத இடங்களுக்கு வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறது. இந்த மசோதாப்படி எல்லா பகுதிகளுக்கும் ஒரே மாதிரியாக வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதாக ஏற்படும். அதனால் பல சிக்கல்கள் ஏற்படலாம் என்பதை மனதில் கொண்டு தான் அப்படிப்பட்ட பிரதேசங்களை இதிலிருந்து எடுத்து விடப்பட்டிருக்கிறது. முதலாளிகளைக் காப்பாற்றுவதற்காகவும் அவர்களுடைய வலையில் சிக்கி விட்டதாகவும் கனம் சின்னதுரை சொன்னார். அப்படிச் சொல்வது சரியல்ல. சதா சர்வ காலமும் அவர் முதலாளிகளைப் பற்றியே பேசி வருவதால் அவரைப் பற்றி சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. தங்களிடம் ஏதாவது குற்றங்கள் இருந்தால் அந்தக் குற்றங்களை மறைப்பதற்காக அதே குற்றங்களை மற்றவர்கள் பேரில் சாட்டுவது சிலருடைய வழக்கம். அந்த முறையில் தான் கனம் சின்னதுரை அவர்கள் பேசுகிறாரோ என்று சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால் அவர் அடிக்கடி முதலாளிகளைப் பற்றியே பேசமாட்டார். அப்படி அடிக்கடி அவர் அவர்களைப்பற்றி பேசி வருவதால்தான் அப்படிப்பட்ட சந்தேகம் தோன்றுகிறது. (கனம் சின்னதுரையின் குறுக்கீடல்.) இதற்கும் முதலாளிகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

இன்றைக்கு பார்த்தால் தனிப்பட்ட முதலாளிகள் போடக்கூடிய காலனிகளாக இருந்தாலும், சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற காலனியாக இருந்தாலும் அந்த காலனிகளுக்கும் ஏற்கெனவே பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் நாம் கொண்டு வருகிற சட்ட அடிப்படையில் எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் விஸ்தரிக்க வேண்டியதாக இருக்கும். அதிகமாக வசதிகள் இல்லாத இடங்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க நிதி உதவும்போது அதே மாதிரி வசதிகளை ஏற்கெனவே அடைந்துள்ள பகுதிகளுக்கும் அதே அளவில் ஒதுக்கத்தக்க

நிதி ஒதுக்க வேண்டியதாக ஏற்படும். அப்பொழுது ஏற்கெனவே வசதி களை அடைந்து வந்த பகுதிகள் அதிகப்படியாக வசதிகளை அடைந்ததாக ஏற்பட்டு விடும். அப்படி இல்லாமல் ஒரே மாதிரியாக எல்லா பகுதிகளும் வசதிகளைப் பெறுவதற்குத்தான் இப்படிப்பட்ட விதி செய்யப்பட்டிருக்கிறது. பொது ஜனங்கள் கொடுக்கக்கூடிய வரிப் பணத்தை எடுத்து எல்லோ ருக்கும் சமமாகத்தான் எடுத்துக்கொடுக்க வேண்டும். அதே மாதிரி தான் முனிசிபாலிட்டிகளுக்கும், முனிசிபாலிட்டியில் இருக்கிறவர்களுக்கு ஏற்கெனவே அதிகப்படியான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது அங்கே மறுபடியும் வசதிகள் செய்து கொடுப்பதற்கு நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் இப்படிப்பட்ட பகுதிகளையெல்லாம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அந்தக் கொள்கை அடிப்படையில் தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. முதலாளிகளுடைய வலையில் சிக்கி விட்டதால் இப்படிக்கொண்டு வரவில்லை என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதில் தொழிலாளர்களுக்கும் முதலாளி களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

அதைப்போலவே இப்பொழுது ஹெல்த் ரிசார்ட் இருக்கிறது. அந்த இடங்களுக்கு ஏற்கெனவே வெளி இடங்களிலிருந்து மக்கள் வந்து கொண் டிருக்கிறார்கள். பருவ காலங்களில் அந்த இடங்களுக்கு வந்து ஆரோக்கிய வாழ்க்கை நடத்திக்கொண்டு போகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக் கெல்லாம் ஏற்கெனவே நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கி ன்றன. இந்தச் சட்டத்தின் பிரகாரம் அப்படிப்பட்ட இடங்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதாக வரும். ஆயிரக்கணக்கான வர்கள் வெளியூர்களிலிருந்து ஹெல்த் ரிசார்ட் என்று வந்து தங்கி தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறார்கள். அந்த நிலைமை ஏற்படு வதால் அங்கே அதிகப்படியாக வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு ஏற்கெனவே சர்க்கார் பல வசதி களைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக கிராம மக்களுக்குத் தான் அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் அங்கத்தினர்கள் எல்லோரும் முதலாளிகளுடைய வலையில் விழுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. என்னைப் பொறுத்த வரையில் என்ன சொன்னாலும் அதை நான் பொறுத்துக்கொள்ளுகிறேன். அதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் எல்லா அங்கத்தினர்களையும் சேர்த்துச் சொல்லக்கூடாது. (கனம் சின்னதுரையின் குறுக்கீடல்.) சதா சத்தம் போட்டுக்கொண்டி ருப்பதில் அர்த்தம் இல்லை. இன்னும் எவ்வளவோ பலமான வார்த்தைகளை என்னால் உபயோகிக்க முடியும். அப்படி உபயோகிக்க எனக்கு இஷ்டம் இல்லை. அதனால் இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன். ஆகவே வெளியூர்களிலிருந்து ஆயிரக் கணக்கான மக்கள் ஹெல்த் ரிசார்ட்டுகளுக்கு வந்து ஆரோக்கிய வாழ்க்கையை நடத்தி வருவதனால் அவர்களுக்கு நாம் அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அங்கே அதிகமாக செலவு செய்ய வேண்டிய தாகவும் இருக்கிறது.

அடுத்தபடியாக "Chairman elected or appointed" என்று இருக்கிறது என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். "Appointed" என்பது வேண்டுமென்றே போடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக சட்ட பூர்வமாக உத்தியோகப் பற்றற்றவர்கள்தான் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். சில இடங்களில் இண்டஸ்ட்ரியல் காலனிகள் இருக்கின்றன. மேஜர் டவுன்ஷிப்புகள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் பெரும்பாலும் சர்க்கார் இலாகாக்களிலுள்ள சர்க்கார் ஊழியர்கள்தான் உத்யோகஸ் தர்களாக வருகிறார்கள். அங்கேயெல்லாம் டவுன்ஷிப் கமிட்டி நியமிக்கும் போது அநேகமாக உத்யோகஸ்தர்களையே நியமிக்கும்படியாக இருக்கும். அவர்களில் எலெக்ஷன் வைத்து சேர்மனை தேர்ந்தெடுப்பது என்பது சரியல்ல. அது தவறு. அதனால் சர்க்காரே நியமிக்க வேண்டும் என்பதற்காகத்தான் "appointed" என்று போடப்பட்டிருக்கிறது.

மற்ற இடங்களில் உத்தியோகப்பற்றற்றவர்கள் இருக்கலாம். அங்கே யெல்லாம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் எலெக்டட் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த முறையில்தான் அங்கே எலெக்டட் ஆர் அப்பாயிண்டட் என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே கனம் கோவிந்தசாமி அவர்கள் தங்களுடைய திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்காருடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மற்ற திருத்தங்களை வலியுறுத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

The amendment of Sri A. Govindasamy was, by leave, withdrawn.

The amendments of Sri P. S. Chinnadurai were put and lost.

The Government amendment was put and carried.

Clause 4 as amended was put and carried.

Clause 5.

MR. SPEAKER : The motion is :—

" That clause 5 *do* stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" (i) *for* sub-clause (1), *substitute* the following sub-clause :

(1) The Government may, by notification, direct that any panchayat town with a population estimated at not less than twenty thousand and with an estimated annual income of not less than one lakh of rupees be constituted as or included in a municipality for the purposes of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920) with effect on and from such date as may be specified in the notification :

Provided that before issuing a notification under this subsection the panchayat concerned shall be given a reasonable opportunity for showing cause against such proposal.

(ii) in the proviso to sub-clause (2), *after* the words ' panchayat union council ' *insert* ' exercising jurisdiction over the area concerned '."

I also move : " In clause 5 (3) (*b*), *for* the words ' the commencement of this Act ' *substitute* ' the constitution or inclusion aforesaid '."

* SRI M. P. SUBRAMANIAM : ஐயா, இந்தப் பிரிவு, சாதாரணமாக எஸ்டிமேடட் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாயும், எஸ்டிமேடட் ஜனத்தொகை 20 ஆயிரமும் இருந்தால் கட்டாயமாக முனிசிபாலிடி ஆக்கப்படவேண்டும் என்று கூறுகிறது. ஆனால், அப்படி ஆக்குவதற்கு முன்பு, அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும் என்றும் கூறுகிறது. ஆனால், நான் இதிலே கூறிக்கொள்வது என்னவென்றால், சாதாரணமாக ஜனத்தொகை பதினையாயிரம் இருந்தாலும், பக்கத்திலே ஐயாயிரம் ஜனத்தொகையுள்ள கிராமத்தையும் சேர்த்து முனிசிபாலிடியாக, அவர்கள் விருப்பத்திற்கு மாறாகவும், செய்ய இடம் ஏற்படுகிறது. "Shall" என்பதை "may" என்று மாற்றிவிட்ட காரணத்தால், "with the consent" என்ற கருத்து அமையுமானால் நல்லது என்று நான் நினைக்கிறேன். பஞ்சாயத்து, முனிசிபாலிடியாக 10-40 a.m.

[Sri M. P. Subramaniam] [25th September 1958

மாறினால் அதிக வசதிகள் கிடைக்கின்றன என்பது உண்மையாக இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் வரி வசூலிப்பதற்குத் தயாராக இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் விதிகளை மாற்றுவது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

SRI S. LAZAR : சபாநாயகர் அவர்களே, ஷரத்து 5, உப ஷரத்து (2) இன் கீழ் இருக்கும் ப்ரொவிசோவுக்கும் சர்க்கார் கொடுத்திருக்கும், திருத்தத்திற்கும் திருத்தம் தேவைப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்காரத் திருத்தத்தில் "concerned" என்ற வார்த்தை தேவையில்லை. ஏனென்றால், "concerned" என்ற வார்த்தை ஷரத்திலேயே இருக்கிறது. நான் குறிப்பிடுகிற மாற்றத்தோடு சர்க்காரத் திருத்தத்தை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது.

The wording of the Government amendment is: ". . . . after the words 'panchayat union council', insert 'exercising jurisdiction over the area concerned'." The word 'concerned in the amendment is unnecessary as that word is found in the main clause itself. The amendment should read like this: "(ii) in the proviso to sub-clause (2), after the words 'panchayat union council' insert 'exercising jurisdiction over the area'." The word 'concerned' should be deleted in the amendment brought forward by the Government.

MR. SPEAKER : Has the Hon. Minister anything to say about this?

THE HON. SRI C. SUBRAMANIAM : I shall explain it later, Sir. The word 'concerned' is redundant.

SRI A. GOVINDASAMY : சபாநாயகர் அவர்களே, சில மேஜர் பஞ்சாயத்துக்கள் நகரசபையாக மாறவேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். அப்படிக் கேட்டிருந்தும் ஏற்படாத நிலைமை இருக்கிறது.. குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ராணிப்பேட்டையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அது ஒரு பெரிய பஞ்சாயத்து. இப்பொழுது அதற்குப் போதுமான ஜனத்தொகையும் நிதி வசதியும் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட பஞ்சாயத்துக்களெல்லாம் இந்தத் திருத்தத்தின்மூலம் உடனடியாக நகரசபைகளாக மாறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர் களே, கனம் அங்கத்தினர் லாஸர் அவர்கள் சொல்லக்கூடியது "concerned" என்ற வார்த்தை ஒரு தடவை இருந்தால் போதும், இரண்டு இடத்திலும் வரத் தேவை இல்லை என்பது. இன்னொரு வார்த்தை எடுக்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பிழையைத் திருத்திக் கொள்ளலாம். "Exercising jurisdiction over the area" என்று இருந் தால் போதும். ஏனென்றால், "concerned" என்னும் வார்த்தை முன்னாலேயே இருக்கிறது.

இந்த விதியைப்பற்றி அதிகமாக விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை. பெரிய நகர்ப்புறங்களாக இருக்கும் பகுதிகளும் இன்றைக்கு பஞ்சாயத்து அடிப்படையிலே இயங்கிவருகின்றன. அதன் காரணத் தினாலே பல வசதிகள் அங்கு செய்ய முடியாமல் போகின்றன. ஆனால், சில இடங்களிலே அதிகமான ஜனத்தொகை இருந்தாலுங்கூட, பல கிராமங்கள், சுற்றுப்புறங்களில் இருக்கும் கிராமங்கள் சேர்ந்து, இந்த ஜனத்தொகை 20 ஆயிரம், 25 ஆயிரம் என்று இருக்கலாம். ஆனால், நகர்ப்புறங்களிலே இருக்கும் நிலைமை இங்கு இல்லாமல் இருக்கலாம். ஆகையால்தான் இதை ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டு

25th September 1958] [Sri C. Subramaniam]

மென்ற காரணத்தால், "Government may" என்று போட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவில் நாமகிரிப்பேட்டை என்று நினைக்கிறேன். அதைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களையும் பஞ்சாயத்தையும் சேர்த்தால் அங்கு இருக்கும் ஜனத்தொகை 20 ஆயிரத்துக்கு மேல் இருக்கிறது. இன்னும் சில இடங்களில் ஒரு லட்சத்திற்கு மேல் ஜனத்தொகை இருக்கலாம். ஆனால், பார்த்தால் முழுதும் கிராமப் புறமாகவே இருக்கிறது. நகரப்புறங்களுக்கு இருக்கவேண்டிய அடையாளங்கள், சின்னங்கள் காணப்படாமல் இருக்கிறது. ஆகையால்தான், "may" என்ற வார்த்தை போடப்பட்டிருககிறது. ஆகையால், இதைக் கவனித்து எந்த எந்த பகுதி முனிசிபாலிடியாக இருக்க வேண்டும், எந்த எந்த பகுதி பஞ்சாயத்தாக இருக்கவேண்டும் என்பதைச் சர்க்கார் முடிவு செய்யும். முனிசிபாலிடியாக மாறுவதற்கு அவசியமாக இருக்கும் பகுதிகளில் கூட, "நாங்கள் பஞ்சாயத்துக்களாகவே இருக்கிறோம்" என்ற விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்கள். சற்று அதிகமாக வரி கொடுக்கவேண்டி இருக்குமே என்பதுதான் இதற்குக் காரணம். வரி கொடுக்க வேண்டாம், பிற்போக்கான நிலைமையிலேயே இருந்துகொண்டிருக்கட்டும் என்று விட்டுவிடுவதா? அல்லது, சில பகுதிகள், நகர்ப்புறங்களாக அபிவிருத்தி அடைந்திருக்கும் பகுதிகள் கட்டாயமாக ஓரளவாவது வசதிகள் பெற்றாகவேண்டும் என்ற முறையிலே சட்டம் அமுலாக்கப்படவேண்டுமா என்பதைத்தான் நாம் யோசிக்கவேண்டும். ஆகையால், நகர்ப்புறங்களாக அபிவிருத்தியாகியிருக்கும் பகுதிகள் கட்டாயமாக முனிசிபாலிடியின்கீழ் வந்து, அந்த வசதிகளைப் பெற்றிருக்கும் காரணத்தால், அந்த அபிவிருத்தியினுடைய பயனைப் பெற்றிருக்கும் காரணத்தால் கொஞ்சம் அதிகமாக வரி செலுத்தி வசதிகளைப் பெறவும் மக்கள் தயாராக இருக்கவேண்டும். பஞ்சாயத்துக்களின் அபிப்பிராயத்தைக் கேட்கலாமே தவிர, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுத்தான் முனிசிபாலிடி அமைக்கவேண்டுமென்றால் பல பகுதிகளிலே வேண்டாமென்று சொல்லிவிடுவார்கள். ஆகையால், அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு அங்கிருக்கும் எல்லாவிதமான சூழ்நிலையையும் கவனித்து கடைசியாக சர்க்கார் முடிவு செய்ய வேண்டும் என்ற முறையிலே இந்த விதி அமைக்கப்பட்டிருக்கிறது. இதை அவ்வாறு ஒப்புக்கொள்ளலாம் என்று நான் நினைக்கிறேன்.

MR. SPEAKER : The word 'concerned' in item (ii) of the Government amendment should be omitted.

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

MR. SPEAKER : Now, I will put the Government amendment to the vote of the House.

The question is—

"In the proviso to sub-clause (2) of clause 5, *after* the words 'panchayat union council', *insert* 'exercising jurisdiction over the area'."

The amendment was put and carried.

MR. SPEAKER : The question is—

"*For* sub-clause (1) of clause 5, *substitute* the following sub-clause :

'(1) The Government may, by notification, direct that any panchayat town with a population estimated at not less than twenty thousand and with an estimated annual income of not less than one lakh of rupees be constituted as or included in a municipality for the purposes of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920) with effect on and from such date as may be specified in the notification :

Provided that before issuing a notification under this sub-section, the panchayat concerned shall be given a reasonable opportunity for showing cause against such proposal '."

The amendment was put and carried.

MR. SPEAKER : The question is—

" In sub-clause 5 (3) (*b*), for the words ' the commencement of this Act ', *substitute* ' the constitution or inclusion aforesaid '."

The amendment was put and carried.

Clause 5, as amended, was put and carried.

Clause 6.

MR. SPEAKER : The motion is—

' that clause 6 *do* stand part of the Bill '.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I move—

" In clause 6 (3), *for* the words ' all references to a municipal council ', *substitute* ' all references, in the proviso so notified, to a municipal council '."

The amendment was put and carried.

Clause 6, as amended, was put and carried.

Clause 7.

MR. SPEAKER : The motion is—

' that clause 7 *do* stand part of the Bill '.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I move—

(1) " In sub-clause (4), *for* the words ' any village or town in the vicinity thereof ' *substitute* ' any area contiguous to it ' and *after* the word ' cancel ' *insert* ' or modify '."

(2) " In sub-clause (5), *after* the words ' give the panchayat union council or panchayat union councils ' *insert* ' and the panchayat or panchayats ', *for* the words ' the explanations ' *substitute* ' their explanation ' and *omit* the words ' of such panchayat union council or panchayat union councils '."

(3) " In the heading to clause 7, *for* the word ' Creation ', *substitute* ' formation '."

The amendments were put and carried.

Clause 7, as amended, was put and carried.

Clause 8 was put and carried.

25th September 1958]

Clause 9.

MR. SPEAKER : The motion is—

'that clause 9 *do* stand part of the Bill.'

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

'*Omit* sub-clause (3).'

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, this amendment is not necessary as I am moving a comprehensive amendment.

I move—

'*For* clause 9, *substitute* the following clause :—

"9. *Alteration of classification of towns and villages*—

(1) The Government may alter any classification notified under sub-section (1) of section 3, if in their opinion the town or village satisfies or ceases to satisfy the conditions referred to in that sub-section;

(2) Any decision made by the Government under this section shall not be questioned in a Court of Law."'

The amendment of Sri T. S. Ramaswamy Pillai was put and lost.

The Government amendment was put and carried.

Clause 9, as amended, was put and carried.

Clause 10.

MR. SPEAKER : The motion is—

'that clause 10 *do* stand part of the Bill.'

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்களுக்கும், பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்கிற கருத்தோடுதான் நான் இந்த ஷரத்துக்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்திருந்தேன். என்னுடைய கருத்தை சர்க்கார் ஏற்றுக் கொண்டுவிட்டதன் காரணமாக நான் அந்த திருத்தத்தைப் பிரேரேபிக்கவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'To sub-clause (3), *add* the following proviso :—

"Provided that the strength of the panchayat as notified under sub-section (1) or as altered by notification under sub-section (2) shall be deemed to be increased by one in case a member is co-opted under section 15, sub-section (4)."'

The amendment was put and carried.

Clause 10, as amended, was put and carried.

Clause 11 was put and carried.

Clause 12.

MR. SPEAKER : The motion is—

'that Clause 12 *do* stand part of the Bill.'

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

'In sub-clause (1) *for* the words " whose name is included in the electoral roll for that panchayat whether he is a member of the panchayat or not " *substitute* the words " who is a member of the panchayat ".'

'In sub-clause (2) *for* the words " but shall not " *substitute* the words " and shall also " in line 12.'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'In sub-clause (1) *after* the words " one person " in line 45, *add* the words " from a panchayat village or two persons from a panchayat town ".'

MR. SPEAKER : The amendment falls through for want of a seconder.

SRI A. GOVINDASAMY : Sir, I move—

'*For* sub-clause (1), *substitute* the following, namely :—

" (1) Every panchayat constituted under this Act in a panchayat union shall elect to the panchayat union council in the prescribed manner one person from among the members." '

SRI M. SELVARAJ : Sir, I second it.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I move—

'In sub-clause (1)—

(i) *for* the words " one person whose name is included in the electoral roll for that panchayat whether he is a member of the panchayat or not ", *substitute* the words " one or more persons who are members of such panchayat or township in proportion to the population of such panchayat or township "; and

(ii) at the end of the proviso to sub-clause (1) *add* the words " but such co-opted members should be members of any one of the panchayats or townships in the panchayat union ".'

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

'In the proviso to sub-clause (1), *for* the words " may co-opt such number of women ", *substitute* the words " shall co-opt such number of women " in lines 4 and 5.'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'In sub-clause (2) *omit* the word " ex-officio " in line 10, and the words " but shall not be entitled to vote or to be elected as the chairman or vice-chairman of the council " in lines 12-14.'

25th September 1958]

MR. SPEAKER : The amendment falls through for want of a seconder.

SRI A. GOVINDASAMY : Sir, I move—

'*Omit* sub-clause 3.'

SRI M. SELVARAJ : Sir, I second it.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'(i) In sub-clause (1), *for* the word "township" *substitute* "township committee" and for the words "whose name is included in the electoral roll for the panchayat whether he is a member of the panchayat or not" *substitute* "from among its members".

(ii) in sub-clause (2), *omit* "shall ex-officio be a member of the panchayat union council";

(iii) *omit* sub-clause (3).'

MR. SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, personally I am not in favour of the President being represented in the Panchayat Union Council. It would be better if any member of the panchayat or any gentleman whose name finds a place in the electoral rolls is represented in the Council. If the President is represented in the Council, he may not be able to function properly and at the same time it will deprive any member of the panchayat being represented in the Council. Therefore, I would request the Hon. Minister to accept my suggestion.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த 12-வது பிரிவில் அதாவது பஞ்சாயத்து போர்டிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு ஒரு மெம்பரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதில் அவர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பராக இருந்தாலும் சரி அல்லது தேர்தலில் நிற்காது வெளியில் இருக்கக்கூடிய வேறு ஒரு தனி நபராக இருந்தாலும் சரி தேர்ந்தெடுக்கலாம் என்கிற முறை இருக்கிறது. அப்படித் தேர்ந்தெடுக்கக் கூடியவரை கவுன்சில் சேர்மனைத் தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை. மெம்பராக இருக்கக்கூடியவரை மட்டிலும் தேர்ந்தெடுக்கலாம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் தேர்தலில் நிற்காத ஒருவரை அறிவில் சிறந்தவர் என்று சொல்லியோ, கௌரவத்தில் உயர்ந்தவர் என்று சொல்லியோ உள்ளே கொண்டு வந்து விடுவதற்கான வாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலைமையில் இது இருக்கிறது. இது வரவேற்கத் தக்க ரீதியில் இல்லை. அதுமாத்திரம் அல்ல. ஜனநாயகக் கோட்பாட்டுக்கே விரோதமானதாக இருக்கும். பஞ்சாயத்து போர்டுகளுக்கு நாம் அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவதும், மறுபக்கத்தில் இந்த மாதிரியாக ஒருவரை உள்ளே கொண்டு வந்துவிட வழி செய்தால் நல்லது அல்ல. இது எப்படியிருக்கிறதென்றால் தேர்தலில் தோல்வி அடைந்த ஒருவர் மந்திரியாகவோ, கவர்னராகவோ வருவதுபோல அமைந்துவிடுகிறது. ஆகவே இப்படிச் செய்யாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே வரவேண்டும் என்கிற ரீதியில் திருத்தத்தை சர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

11 a.m. **Sri A. GOVINDASAMY :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சர்க்கார் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பஞ்சாயத்தால் அனுப்பப்படும் பிரதிநிதி பஞ்சாயத்தின் வோட்டர்கள் ஜாபிதாவில் இடம் பெற்றிருந்தால் போதும் என்பதுபோல் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை கனம் அமைச்சரின் திருத்தம் மாற்றுகிறது. மசோதாவிலுள்ள விதியை கனம் எதிர்க்கட்சித் தலைவர், மசோதா தயாரிக்கப்படும்போது ஒப்புக்கொண்டிருந்தாலும், இப்போது எதிர்க்கிறார். (குறுக்கீடு). **He was a party to that** பஞ்சாயத்து உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சாயத்துத் தலைவர் தொண்டு செய்யும் மனப்பான்மை உடையவராக இருந்தால், கவுன்சிலுக்கு அனுப்பப்படுவதற்கு அவருக்கும் உரிமை இருக்க வேண்டும். இதற்கும் கனம் அமைச்சரின் திருத்தம் வகை செய்கிறது. எனவே, கனம் அமைச்சரின் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

Sri T. S. RAMASWAMY PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் மூன்று ஹரிஜனங்களும் மூன்று ஸ்திரீகளும் "இருக்கலாம்" . . . may co-opt . . . என்று இருக்கிறது. அக் கவுன்சிலில் மூன்று ஹரிஜனங்களும் மூன்று ஸ்திரீகளும் "இருக்க வேண்டும்". . . . "shall co-opt" என்று என் திருத்தம் கூறுகிறது.

***Sri M. P. SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொடுத்திருக்கும் திருத்தங்களில் முதல் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், அது என்னுடைய திருத்தத்திற்கொப்பவே இருக்கிறது. பஞ்சாயத்து, ஒரு பஞ்சாயத்து உறுப்பினரையே தேர்ந்தெடுத்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பிரதிநிதியாக அனுப்ப வேண்டும் என்பது என் திருத்தத்தின் நோக்கம். அந்த நோக்கத்தை சர்க்காரின் திருத்தம் பூர்த்தி செய்கிறது. சர்க்காரின் இரண்டாவது திருத்தத்தில், 'shall ex-officio be a member of the Panchayat Union Council' என்ற வார்த்தைகளை (2)-வது உப பிரிவிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இத் திருத்தத்தின்படி, சட்டசபை அங்கத்தினர்களுக்கு அங்கே பேசுவதற்குத் தான் உரிமை இருக்கிறது. இத் திருத்தத்தின்படி (2)-வது உப பிரிவிலிருந்து அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டால், அதற்குப் பிறகு அந்த உப பிரிவிலிருக்கும் வாக்கியத்திற்கே அர்த்தமில்லாமல் போய்விடும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

Sri S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, மசோதாவின் மீது பொது விவாதம் நடந்தபோது, மேல் சபை அங்கத்தினர்களையும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் சேர்க்கவேண்டுமென்ற கருத்து பல கனம் அங்கத்தினர்களால் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இக் கவுன்சிலில் சேர்க்கப்படுவதற்கான திருத்தம் இதுவரை செய்யப்படவில்லை. அதற்கு தக்க விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

***Sri M.S. SELVARAJAN :** கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பஞ்சாயத்து மெம்பர் அல்லாதவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் என்ன குற்றம் இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நான் அறிந்த வரையில், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பஞ்சாயத்து மெம்பரே தேர்ந்தெடுக்கப்படுவதாயிருந்தால் தேர்தல் கால மன மாச்சரியங்களும் பூசல்களும் நிலைத்தே இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பஞ்சாயத்து மெம்பரல்லாதார் தேர்ந்தெடுக்கப்படுவதா யிருந்தால், இந்த மன மாச்சரியங்களும் கட்சிப் பூசல்களும் குறைய ஏதுவாக இருக்கும் என்று நினைக்கிறேன். பஞ்சாயத்து தேர்தலில் ஒதுங்கி இருந்த நல்ல ஊழியர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அந்த ஏற்பாடு, பஞ்சாயத்தில் சுமுகமான நிர்வாகம் நடப்பதற்கு ஏதுவாகவும் இருக்கும். பஞ்சாயத்து ஒரு சிறிய கிராம ஸ்தாபனம். அந்த சிறிய ஸ்தாபனத்திற்கும் கட்சி ரீதியான போட்டியையும் அதன் விளைவாக கட்சிப் பகைமை ஏற்பட்டு அப் பகைமை ஒரு வடுவாக மாறுவதையும் யாரும் விரும்ப மாட்டார்கள் என்று நினைக்

25th September 1958] [Sri M. S. Selvarajan]

கிறேன். பஞ்சாயத்திற்குள் கட்சி ரீதியில் போட்டியிடக் கூடாதென்று அரசியல் கட்சிகள் கூட ஒப்பந்தம் செய்து கொள்கின்றன. அப்படி இருக்கும்போது, பஞ்சாயத்தில் கட்சிப் போட்டியை ஏற்படுத்தக் கூடிய விதியை ஏன் வகுக்க வேண்டும் ? அத்தகைய விதியைச் சட்டத்தில் வகுக்கலாமா ? ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் போன்ற கிராம நலத் திட்டங்கள் சென்னையிலும் டெல்லியிலும் உள்ள சர்க்கார்களால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருக்கின்றன. அவைகளுக்கு மத்திய சர்க்காரிடமிருந்தும் சென்னை சர்க்காரிடமிருந்தும் மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்தத் திட்டங்களை பற்றி ஆலோசிக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் மேல் சபை அங்கத்தினர்களும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் இடம் பெறுவதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. மேலும், ஸ்தல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் நமது மேல் சபையில் இருக்கிறார்கள். அவர்களுக்குக்கூட பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் இடம் இல்லை. மேல் சபை அங்கத்தினர்களும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் அந்தக் கவுன்சிலில் ஏன் இடம் பெறக் கூடாது ? இதற்கு கனம் அமைச்சர் பதில் சொல்வார் என்று நம்புகிறேன். அந்தக் கவுன்சிலில் இருக்கும் சட்ட சபை அங்கத்தினர்களுக்குக்கூட, அங்கே வோட்டளிப்பதற்கு உரிமை இல்லை. அவர்களுக்கு அந்த சபையில் தீர்மானம் பிரேரேபிப்பதற்கு உரிமை இருக்கிறது. அவர்களே பிரேரேபித்த தீர்மானத்திற்கு வோட்டளிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. அந்த நிலையில் அவர்கள் அந்த சபையில் பொம்மைபோல் இருக்க வேண்டுமா ? சட்ட சபை அங்கத்தினர்களும் தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். அவர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் வோட்டளிக்கும் உரிமை இல்லாவிட்டால் அவர்களுக்கு அங்கே மதிப்பு இருக்காது; அந்த உரிமை அவர்களுக்கு இருந்தால்தான் அவர்கள் அங்கே தங்கள் அபிப்பிராயத்தைத் தலைநிமிர்ந்து கூறமுடியும். ஓட்டுரிமை இல்லாவிடில் சட்டசபை உறுப்பினர்கள் கூட்டங்களுக்கு ஆஜர் ஆகவும் சிரத்தை கொள்ள மாட்டார்கள். எனவே, அவர்களுக்கு அங்கே வோட்டுரிமை கொடுக்கக்கூடாதா என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI K. R. VISWANATHAN: கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கான தேர்தலில் பஞ்சாயத்து உறுப்பினர்கள்தான் ஈடுபடமுடியும், மற்றவர்கள் ஈடுபடமுடியாது என்ற நிலையை ஏற்படுத்தக்கூடிய திருத்தம் மிகவும் வரவேற்கத்தக்கது. பஞ்சாயத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்குத்தான் பஞ்சாயத்து சம்பந்தமான விஷயங்கள் மிக நன்றாகத் தெரியும் ; ஏனென்றால் அவர்கள் பஞ்சாயத்து நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடிகிறது. ஆகவே அவர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் இருந்தால் அவர்கள் அந்த சபையின் நடவடிக்கைகளில் சிறந்த முறையில் பங்கெடுத்துக்கொள்ள முடியும். அடுத்தபடியாக சட்ட சபை உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் உறுப்பினர்களாக ஆக வேண்டுமென்றால், அவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் நின்று பஞ்சாயத்திற்கு மெம்பர்களாக வந்துவிட்டு அதற்குப் பிறகு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தேர்தலில் நின்று ஜெயித்து அக் கவுன்சிலுக்கு மெம்பர்களாகப் போக வேண்டிய நிலை ஏற்படும். அது மிகவும் வரவேற்கத் தக்கது ; ஏனென்றால் அப்போது தான் அவர்கள் பஞ்சாயத்து விவகாரங்களை நன்றாக அறிந்துகொண்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் நன்றாகப் பணியாற்றுவார்கள். அம்முறையில் சட்டசபை அங்கத்தினர்கள் பஞ்சாயத்து மூலமாக அக் கவுன்சிலில் இடம் பெற்றால் அவர்கள் அங்கே தலைவர் தேர்தலில் நிற்பதற்கான உரிமைக்கும் யூனியன் கவுன்சில் உறுப்பினர்களின் இதர உரிமைகளுக்கும் உரியவர்களாக ஆகிறார்கள். இதனால் சட்டசபை உறுப்பினர்களின் சுதந்திரமோ உரிமையோ எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பதால் இந்தத் திருத்தத்தை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, மேல் சபை உறுப்பினர்களுக்கும் இந்த யூனியன் கவுன்சிலில் இடம் கொடுக்க வேண்டுமென்பது என் வேண்டுகோள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவின் முக்கிய நோக்கமானது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு பிரதிநிதி இருக்க வேண்டுமென்பது ஆகும். இந்தப் பிரதிநிதியை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது பற்றி இப்போது இங்கே பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவைகளில் ஒவ்வொரு கருத்திற்கும் இடம் இருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவராக வருபவரே பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிலும் பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்று ஒரு சிலர் கருத்தறிவித்தனர். அது ஒருகருத்து 'பஞ்சாயத்துத் தலைவரே யூனியன்கவுன்சிலில் பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்று விதி வகுக்க வேண்டாம் ; பஞ்சாயத்து மெம்பர்கள் யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து அவர்கள் பிரதிநிதியாக யூனியன் கவுன்சிலுக்கு அனுப்பலாம் ; அது அவர்கள் இஷ்டத்தைப் பொறுத்த தாக இருக்க வேண்டும்' என்று சிலர் கருத்து தெரிவித்தார்கள். இது இரண்டாவது கருத்து. இதில் ஒரு விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும். யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம் என்பதிலும் சில அபிப் பிராய பேதங்கள் இருக்கின்றன. யார் வேண்டுமானாலும் யாரை வேண்டு மானாலும் தேர்ந்தெடுப்பது என்ற முறை தவறானது. பஞ்சாயத்து மெம் ர்பகள்தான் யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம் என்ற நிலை குறித்து கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு கருத்திலும் ஒரு முறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையிலும் சாதகங் களும் இருக்கின்றன, பாதகங்களும் இருக்கின்றன.

SRI A. GOVINDASAMY : தாங்கள் வக்கீலாக இருப்பதால் . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி இல்லை. ஒவ்வொரு முறையிலும் சாதகங்களும் பாதகங்களும் இருக்கின்றன என்பதில் சந்தேக மில்லை ; நான் வக்கீலாக இருப்பதால் ஒவ்வொரு முறையிலும் இருக்கும் சாதகங்களையும் பாதகங்களையும் என்னால் தெளிவாகப் பார்க்கப் முடிகிறது. எந்த ஒரு நல்ல விதிக்கும் சாதகமான விளக்கங்களையும் கொடுக்கமுடியும் ; பாதகமான விளக்கங்களையும் கொடுக்க முடியும்.

பஞ்சாயத்து பிரஸிடெண்ட் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பஞ்சா யத்தின் பிரதிநிதியாகப் போகக்கூடாது என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் கருத்தறிவித்தார். அந்தக் கருத்திற்கும் தக்க காரணங்களை அவர் எடுத்துச் சொன்னார். பஞ்சாயத்து சம்பந்தமான பல பொறுப்புகள் அவருக்கு இருப்பதால், யூனியன் கவுன்சிலில் அவர் பிரதிநிதியாக இருப்ப தானது, பஞ்சாயத்து சம்பந்தமான அவருடைய வேலைகளுக்கு இடைஞ்ச லாக இருக்கும் என்று அவர் கூறினார். அதோடு, ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்வதற்கு பலருக்கும் வாய்ப்பளிக்கக் கூடிய முறையில் விதி வகுப்பதற்காகவும், பஞ்சாயத்துத் தலைவரல்லாதவர் தான் யூனியன் கவுன்சிலுக்குப் பிரதிநிதியாகப் போக வேண்டுமென்று விதி வகுக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பஞ்சாயத்துத் தலைவர் பிரதிநிதியாகப் போகக்கூடாது என்ற கருத்திற்கு இவை தகுந்த காரணங்கள்தான்.

ஒரு சிலர் பஞ்சாயத்து பிரசிடெண்டாய் இருந்து காரியங்கள் நடத்த
11-10 a.m. தகுதியுள்ளவர்களாக இருக்கலாம். அவர் கௌன்ஸிலிற்கு சென்று காரி யங்களை நடத்த முடியாமல் இருக்கலாம். ஆகவே, இவர் ஊர் பஞ்சாயத் திற்குத்தான் சரி என்றும் வெளியில் போய் காரியங்களை முடித்துகொண்டு வர லாயக்கில்லை என்று சொல்லலாம். எதற்கும், இரண்டு பக்கங்களில் இருந்தும் பலதும் சொல்லலாம். பஞ்சாயத்து கௌன்ஸிலிற்கு அனுப்பப் படுபவர் ஏன் பஞ்சாயத்து மெம்பராக இருக்கவேண்டும். தேர்தலுக்கு நிற்காத ஒருவரை, அவர் திறமைசாலியாக இருந்தால் அவரை ஏன் கௌன்ஸிலிற்கு அனுப்பக்கூடாது என்று சிலர் கேட்கலாம். ஏன் பஞ்சா யத்துகளின் அதிகாரங்களை, சட்டம் போட்டு கட்டுப்படுத்த வேண்டுமென்றும் சிலர் கேட்கலாம். தங்களுக்குள்ளேயிருந்துதான் ஒருவரை அனுப்ப வேண்டுமென்ற கட்டுப்பாடு ஏன் இருக்கவேண்டும், இப்படிச் செய்வது பஞ்சாயத்தின் உரிமையை பாதிக்குமே என்று நினைக்கிறார்கள், சிலர். என்னைப் பொறுத்தவரையில், லாட்டரி சீட்டு போட்டு ஒருவரை அனுப்புவது

25th September 1958] [Sri C. Subramaniam]

என்பதிலும் தவறு இல்லை. எல்லோரும் உட்கார்ந்து யோசனை செய்து ஒரு முடிவிற்கு வந்திருப்பதை புனர்பரிசீலனை செய்யவேண்டிய அவசியமில்லை. ஆகவே, எல்லோரும் ஓரளவு ஒப்புக் கொண்டிருப்பதை மேலும் புனர் பரிசீலனை செய்யவேண்டியது அவசியமில்லை என்ற காரணத்தால் கவர்ன்மெண்ட் கொடுத்திருக்கும் திருத்தத்தை, அதாவது பஞ்சாயத்து மெம்பர்களுக்குள்ளிருந்து ஒருவரை, பிரசிடெண்ட்டை வேண்டுமானாலும் சரி, தேர்ந்தெடுத்து பஞ்சாயத்து பிரதிநிதியாக கௌன்ஸிலிற்கு அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. இதில், கருத்து வேறுபாட்டிற்கு இடமிருந்தாலும், எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லக்கூடியது நியாயம் என்று ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், இது எல்லோராலும் ஒப்புக் கொள்ளக்கூடியதாக இருப்பதால் அவர்களும் இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொண்டு அவரது கருத்துக்களை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சட்டசபை அங்கத்தினர்களைப் பொறுத்தது. ஒரு சிலர் நினைக்கிறார்கள், பஞ்சாயத்திற்கு போகும்போது அங்கு வோட்டுரிமை இல்லை என்றால் மதிப்பு இருக்காது என்று. என்னை பொறுத்தவரையில், இப்பொழுது சட்டசபை அங்கத்தினர்கள் பஞ்சாயத்தில் அங்கத்தினராக இருப்பது, அவர்கள் சட்டசபை அங்கத்தினர்களாக இருப்பதால் அதில் பங்கு எடுத்துக்கொள்ள உரிமை இருக்கிறது என்ற அடிப்படையில்தான் அவ்விதி அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு சட்டசபை அங்கத்தினர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு மதிப்பு உயர்வது, அவர்கள் கட்சி விருப்பு வெறுப்பின்றி தங்கள் கருத்துக்களை சொல்வதில்தான் இருக்கிறது. ஊருக்கு எது நல்லது என்ற முறையில் அவர்கள் கருத்துக்களை சொல்வார்களேயானால், அவர்களுக்கு வோட்டு உரிமை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் வார்த்தைகளுக்கு நல்ல மதிப்பு இருக்கும். வோட்டு அளிக்கப்படுமானால், நானும் ஒருகட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் வோட்டு அவிக்கும்போது அவரையும் ஒரு கட்சிக்காரராக ஒதிக்கி வைக்க இடமிருக்கிறது. அப்போது எல்லோருடைய மதிப்பும் அவருக்கு வராது. ஆகவே, சட்டசபை அங்கத்தினர் எல்லோருக்கும் யோசனை சொல்லும் அளவிற்கு தன் காரியங்களை செய்யவேண்டும். ஆகவே, பஞ்சாயத்து அங்கத்தினர் என்ற முறையில் இல்லாது, சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில்தான் அதன் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்வதற்குள்ள உரிமையும், ஆலோசனைகள் சொல்லக்கூடிய உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் எல்லோரும் தேர்தலில் வோட்டு வாங்கிவந்தபோது பஞ்சாயத்து கௌன்ஸிலிற்கு போக வோட்டு வாங்கி வரவில்லை. அசெம்பளி அங்கத்தினர்களாக இருக்கவே வோட்டு வாங்கி வந்திருக்கிறோம். நம் கையில் சட்டமியற்றும் வாய்ப்பு இருக்கிறபடியினால் நாம் எல்லா ஸ்தாபனங்களிலும் அங்கத்தினர்களாக இருக்க வேண்டுமென்பது சட்டமியற்றுவது சரியாகாது என்ற என் கருத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் முன்பு ஒரு தடவை சொன்னது போல், இந்த சட்டசபை அங்கத்தினர்களுக்குள்ள மதிப்பு எங்கு போனாலும் இருக்கும். அப்படி இருக்க வேண்டுமென்பதுதான் என் அவாவும் கூட. வோட்டு உரிமை கிடைப்பதால் நமது மதிப்பு உயர்ந்துவிடப் போவதில்லை. ஆக, அங்கு முழு அங்கத்தினராக போய் மாட்டிக் கொள்ளாமல் எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கும் இந்த திருத்தவிதியை, தயவுசெய்து தங்கள் மனதிலுள்ள கருத்துக்களை ஒதுக்கிவிட்டு, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு.) சட்டசபை அங்கத்தினர்கள் தீர்மானங்கள் அனுப்பலாமா என்பதைப்பற்றி சந்தேகம் வந்து விட்டது. இது, விதிகளில் செய்ய வேண்டியது. வேண்டுமானால் இந்த சட்டசபை அங்கத்தினர்களும் தீர்மானங்கள் அனுப்பலாம் என்பதைச் சேர்த்துக் கொள்ளலாம்.

The amendment of Sri V. K. Kothandaraman was put and lost.

The amendments of Sri A. Govindasamy and Sri M. P. Subramaniam were by leave withdrawn.

The amendment of Sri T. S. Ramaswamy Pillai was put and lost.

The Government amendment was put and carried.

Clause 12 as amended was put and carried.

Clause 13.

MR. SPEAKER : The motion is—

"That clause 13 *do* form part of the Bill".

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"In item (vi); clause (*c*)—

(i) in line 15, *after* the word 'all' *insert* 'elementary'; and

(ii) in lines 19 and 20, *for* the words 'such authority * * * order, *substitute* the words 'regional educational boards at district level to be constituted by the Government as may be prescribed'."

The amendment was duly seconded.

(Deputy Speaker in the Chair.)

THE HON SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"In clause 13—

(*a*) in the heading, *for* the expression 'and XXX of 1955' *substitute* 'XXX of 1955 and XIII of 1957';

(*b*) in sub-clause (1), *for* the expression 'and the Madras Land Revenue (Additional Surcharge) Act, 1955 (Madras Act XXX of 1955)' *substitute* 'the Madras Land Revenue (Additional Surcharge) Act, 1955 (Madras Act XXX of 1955) and the Madras District Board (Amendment) Act, 1957 (Madras Act XIII of 1957)'."

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆரம்பக் கல்வியானது ஜில்லா போர்டில் இருக்கும்போது, ஜில்லா போர்ட் பள்ளிக் கூடங்களை சரிவர நிர்வகிக்கவில்லை, ஆகவே அவைகளை சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, ஜில்லா போர்ட் நிர்வாகத்தில், ஆசிரிய ஆசிரியைகளை மாற்றுவதைத் தவிர வேறு எந்தவிதமான காரியமும் செய்யப்படவில்லை. இரண்டு மூன்று மாதங்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் சரிவர கொடுப்பதில்லை. ஆகவே, எங்கு பார்த்தாலும் இம்மாதிரி கிளர்ச்சி இருந்தது. சர்க்காரே அவைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று. அதிலும் மட்டமான பஞ்சாயத்து யூனியன்களிடம் ஆரம்பக் கல்வியைக் கொடுப்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸரிடம் இந்த ஸ்தாபனத்தை ஒப்படைத்தால் சரியான அளவுக்கு நடைபெறும் என்று தெரியவில்லை. அரசியல் சட்டப்பிரகாரம் எல்லோருக்கும் கட்டாய கல்வி முறையை கொண்டு வரவேண்டும் என்று நாம் எல்லோரும் சொல்லுகின்றோம். அப்படி சொல்லும்போது கல்வியானது ஒரே முறையிலும் சரியான முறையிலும் இருக்கவேண்டும். அதிலும் ஆரம்ப கல்வியானது மிகவும் முக்கியமானது. அதை சரிவர நடத்தாவிட்டால் பாக்கி இருக்கக்கூடிய பாடங்களும் மேல் படிப்புகளும் இதன் மூலம் கெட்டுவிடும் என்பதை நாம்

25th September 1958] [Sri N. K. Palanisami]

உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே இதற்கு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ரீஜனல் போர்டு ஏற்படுத்தி அதற்கு ஒரு டி.இ.ஒ.வை தலைவராக ஏற்படுத்தி, அந்த போர்டின் கீழ் செகண்டரி கல்வியானாலும் சரி, எலிமெண்டரி கல்வியானாலும் சரி, இண்டஸ்ட்ரியல் கல்வியானாலும் சரி இவைகளை எல்லாம் இந்த போர்டின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்து, நடத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம். இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not accept the amendment of Sri N. K. Palanisami.

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

The Government amendment was put and carried.

Clause 13, as amended, was put and carried.

Clause 14.

DEPUTY SPEAKER : The motion is—

'That clause 14 *do* stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

At the end of the clause, *add* the following proviso :—

'Provided that no person shall be eligible to be elected or co-opted under this Act as a member of more than one panchayat'.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : தலைவர் அவர்களே, அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கக்கூடிய முறை இன்றையதினம் வேறு முறையில் நடந்து வருகிறது. அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன் கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், 'விதிகள் மாற்றும்போது இதை திருத்திக் கொள்ளலாம் என்று, என்றாலும் அவ்விதம் திருத்தும் போது சில யோசனைகளை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக சில ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பஞ்சாயத்துகளில் தேர்தலில் கடைபிடிக்க வேண்டிய முறை இன்று நடைபெறக் கூடிய சட்டசபை தேர்தலிலும் இல்லை, பார்லிமெண்ட் தேர்தலிலும் இல்லை. இரண்டு அங்கத்தினர்கள் நிற்கக்கூடிய தொகுதியில் இரண்டு வோட்டு சீட்டுகளை ஒரே அங்கத்தினரின் பெட்டியில் போட்டால் ஒரு வோட்டுசெல்லுபடியாகும், ஒன்று செல்லுபடியாகாது என்கிற முறைதான் இப்போது சாதாரணமாக இருந்து வருகிறது. ஆனால் இந்த பஞ்சாயத் தேர்தலில் நான்கு அல்லது ஐந்து மெம்பர்களை தேர்ந்தெடுக்கக்கூடிய வார்டுகளில் கொடுக்கக்கூடிய ஐந்து வோட்டுச் சீட்டுகளையும் ஒரு அங்கத்தினருடைய பெட்டியில் போட்டுவிட்டால் அந்த ஐந்து வோட்டுகளும் செல்லுபடியாகும் என்று இருக்கிறது. இந்த முறை மிக மிக மோசமான முறை. அது மாத்திரமல்ல வோட்டுச் சீட்டுகள் கொடுப்பதிலும் அங்கேயே ஒரு வெள்ளை காகிதத்தில் ஒரு முத்திரையை அடித்து கொடுத்துவிட்டால் போதும் என்று இருக்கிறது. இந்த மாதிரி இருந்தால் பல மோசடிகள் நடப்பதற்கு ஏதுவாக இருக்கும். இவ்விதம் பல மோசடிகள் நடந்திருப்பதாக ஆளும்கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் கந்தசாமி அவர்களே சொன்னார்கள், அதாவது 600 வோட்டுகள் உள்ள ஒரு இடத்தில் 700 வோட்டுகள் பதிவாகியிருக்கிறது என்று எடுத்துக் காட்டினார். அதை நம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே இந்த வோட்டு முறையில் அந்த வார்டில் நான்கு அல்ல, ஐந்து அல்ல, ஆறு என்றிருந்தாலும் ஒருவருக்கு போடுகிற

வோட்டுச் சீட்டுகளில் ஒன்றுதான் செல்லுபடியாக வேண்டும். அதாவது ஒரு பெட்டியில் ஆறு பேர்களுக்கும் கொடுக்கக்கூடிய வோட்டுச் சீட்டுகளை ஒரேயடியாகப் போட்டுவிட்டால் அதில் ஒன்றுதான் செல்லுபடியாகும். மற்றவைகள் எல்லாம் செல்லுபடியாகாது என்று இருக்கக்கூடிய முறை இருக்க வேண்டும். அதேமாதிரிதான் வோட்டுச் சீட்டுகள் கொடுப்பதில் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய மோசடிகளை மனதில் வைத்துக்கொண்டு இவ்விதம் நடைபெறாமல் இருப்பதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வோட்டுச் சீட்டுகளை பிரிண்ட் செய்து கொடுக்கக்கூடிய முறை இருக்க வேண்டும். ஆகவே, இந்த முறைகளைக் கொண்டு வர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தேர்தல் முறையில் இருக்கக் கூடிய சில முறைகளைப் பற்றிச் சொன்னார்கள். இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து ரூல்களை செய்கின்ற காலத்தில் இவைகளை ஏற்றுக்கொள்ளலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்று நம்புகிறேன். ஆகவே, இப்போது என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நம்புகிறேன்.

The amendment was put and carried.

Clause 14, as amended, was put and carried.

Clause 15.

DEPUTY SPEAKER : The motion is—

' That clause 15 *do* stand part of the Bill.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

(i) In the heading, *after* the words ' scheduled castes ' *add* ' and co-optation of women ';

(ii) *after* sub-clause (3), *add* the following sub-clause :—

' (4) Every panchayat shall be entitled to co-opt to itself one woman whose name appears in the electoral roll for the panchayat, if no woman has been elected to that panchayat '.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRIMATHI KAMALAMBUJAMMAL : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது இருப்பதில் ஒரு பெண் அங்கத்தினரை ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கோப்-ஆப்ட் செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது. இவ்விதம் இருப்பது 5 அங்கத்தினர் கொண்ட ஒரு பஞ்சாயத்து என்றால் சரியாக இருக்கும். ஆனால் 10 அல்லது 15 அங்கத்தினர்கள் வரக்கூடிய பஞ்சாயத்துகளில் இரண்டு பெண் அங்கத்தினர்களாவது இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆகவே இதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI M. S. SELVARAJAN : கனம் அம்மையார் அவர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட பெண் அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய சட்டபூர்வமான உரிமை இருக்கவேண்டும் என்று கூறினார்கள். என்னுடைய எண்ணம் என்னவென்றால் சாதாரண கிராமத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒவ்வொரு பெண் அங்கத்தினராவது கிடைப்பார்களா என்பதுதான். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பெண்ணாவது மருந்துக்குக் கிடைப்பார்களா என்பதுதான் என்னுடைய சந்தேகம். அந்த அளவுக்கு சிறிய சிறிய கிராமங்களில், அதவாது நாம் அமைக்கப்போகிற 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் கிராம அமைப்புகளுக்கு எல்லாம் எதிர்பார்க்கிற அளவுக்கு

25th September 1958] [Sri M. S. Selvarajan]

பெண்மணிகள் அலங்கரிக்க வந்துவிடுவார்கள் என்று சொன்னால் நம்முடைய குறிக்கோளே நிறைவேறக்கூடிய அளவுக்கு காலம் வந்துவிட்டது என்று நாம் பெருமைபட்டுக் கொள்ளலாம். அவ்விதம் வந்துவிட்டால் அதுவே ஒரு பெரிய சாதனையாக இருக்கும். ஆகவே ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் இருக்கவேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. இவ்விதம் ஒவ்வொரு கிராமத்திற்கும் வந்துவிடுவார்கள் என்ற எண்ணம் இருக்குமானால் நிச்சயமாக அவர்கள் தேர்தல் மூலம் பஞ்சாயத்து அங்கத்தினர்களாக வந்துவிடுவார்கள். அந்தக் காலத்தைதான் நாம் எல்லோரும் எதிர்பார்க்கிறோம். ஆனால் ஒவ்வோரு பஞ்சாயத்துக்கும் ஒரு பெண்ணை கோ-ஆப்ஷன் மூலம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றால், இன்றைய தினம் இருக்கக்கூடிய சூழ்நிலையில், இவ்விதம் பெண் அங்கத்தினர்களாக வரக்கூடியவர்கள் அந்த கிராமங்களில் இருக்கக்கூடிய ஆரம்ப பள்ளி ஆசிரியைகள்தான். அவர்கள்தான் இந்த அங்கத்தினர்களாக வருவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று நினைக்கிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டப்பிரகாரம் இப்போதுள்ள ஆசிரியைகள் இவ்வித நிலையில் வருவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. அதவாது பஞ்சாயத்து போன்ற ஸ்தல ஸ்தாபனங்களில் அவர்களுக்கு அங்கத்தினர்களாக வருவதற்கு, நேரடியாக பங்கு பெறுவதற்குத் தடை இருக்கிறது.

(Mr. Speaker in the Chair.)

ஆகவே நம்முடைய எண்ணம் ஈடேற வேண்டுமானால் இந்த முறையில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு பெண் அங்கத்தினர் வரவேண்டுமென்றால் இதுபோன்று ஆசிரியைகள் வரக்கூடிய இடங்களில் அவர்கள் அங்கத்தினர்களாக முன்வருவதற்கு வேண்டிய விதத்தில் ஒரு ஏற்பாட்டை நாம் செய்யவேண்டும். இவ்விதம் கோ ஆப்ஷன் செய்வதிலும் ஆசிரியைகளை கோ-ஆப்ட் செய்துகொள்வதற்குத் தகுந்த முறையில் வழி வகுக்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, அரசாங்கம் இதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*SRI M. P. SUBRAMANIAM : ஐயா, எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் ஒரு பெண் உறுப்பினராவது இருக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்திருப்பதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

மசோதாவின் 15-வது பிரிவு, 2-வது உட்பிரிவில் 1950-ம் வருஷத்திய சட்டம் செலாவணியாகத் தொடங்கியதிலிருந்து 10 வருஷ காலம் கழிந்து போன பிறகு முதன் முதலாகத் தேர்தல் நடத்தப்படுகிறவரையில் மாத்திரம்தான் இந்த ரிஸர்வேஷன் உண்டு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது 1960-க்குப் பின்னால் நடக்கும் தேர்தல் வரையில் என்று இருக்கிறது. 1960-ம் வருஷம் வரையில் என்று அரசியல் சட்டத்தில் இருப்பது மாற்றப்படக்கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ரிஸர்வேஷன் இருக்கும் வரையில் என்று மாற்றிவிட்டால் நல்லது. இல்லையானால், 1960-க்குப் பிறகு இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே இந்த ரிசர்வேஷனை நீடித்தால், இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, இந்தச் சட்டத்திலே " இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே ரிஸர்வேஷன் இருக்கும் வரையில் " என்று மாற்றியமைத்தால் நல்லது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் இந்த ரிஸர்வேஷன் இந்திய அரசி 11-30 a.m.
லமைப்புச் சட்டத்திலே ரிஸர்வேஷன் இருக்கின்றவரையில் இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் இதைத் திருத்தவேண்டுமென்ற கருத்தைக் கூறினார்கள். இதைப்பற்றி ஆலோசனை செய்து, இப்போது இருக்கக்கூடிய அளவிலே 1965–66 தேர்தல்வரையில் இந்த ரிஸர்வேஷன் இருக்கும். 1960-லே நடக்கும் தேர்தல் 65-ல்தான் வரும், 1961-ல் நடந்தால் 66-ல் தான் வரும். ஆகவே, 1965–66 வரையில் இந்த ரிஸர்வேஷன் இருக்கும். அதற்குள் நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்த்து அந்தச் சமயத்திலே மாற்றியமைத்துக்கொள்ளலாம்.

ஒரு பெண் அங்கத்தினராவது இருக்கவேண்டுமென்பதை பெண் அங்கத்தினர்கள் வற்புறுத்தியதால் சேர்க்கப்படவில்லை. முக்கியமாக நாங்களாகவே, எங்கள் உரிமையினுலேயே தேர்தலில் நின்று வந்து விடுவோமென்றும், ரிஸர்வேஷன் வேண்டாமென்றும் எல்லாப் பெண் அங்கத்தினர்களும் சொன்னுர்கள். ஆனுல், ஆண்களெல்லோரும் பெண்களை விட்டு விடக்கூடாது, ஒருவராவது வேண்டும் என்று வற்புறுத்தியதன்பேரில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆண்கள், பெண்களுடைய உரிமை பாதுகாக்கப் படவேண்டுமென்ற காரணத்திற்காகத் தான் இப்போது இது சேர்க்கப்பட்டிருக்கிறது. பெண்களும் இதை அந்த முறையிலே வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

The amendment was put and carried.

Clause 15, as amended, was put and carried.

Clause 16.

MR. SPEAKER : The motion is—

"That clause 16 *do* stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்தத் தேர்தலை நடத்துவதற்காக வேண்டி வார்டுகளைப் பிரிப்பதிலே எப்படி இருக்கிறது என்று சொன்னுல், பஞ்சாயத்து இருந்தால் அவர்களிடத்திலே இன்ஸ்பெக்டர் கன்ஸல்ட் செய்து, பிறகு விளம்பரம் செய்து, அதற்குப் பிறகு தேர்தல் நடத்தவேண்டுமென்று இருக்கிறது. கன்ஸல்ட் செய்து என்று சொன்னுல், ஏதோ மேலெழுந்தவாரியாக அவர்களிடத்திலே கேட்டு விட்டு, அவர்கள் இஷ்டம் போல் பிரிக்கக் கூடிய அளவுக்கு இன்றைய தினம் நிலைமை இருக்கிறது என்பது தெரியும். பஞ்சாயத்து போர்டு அமைப்பிலே, இன்றைக்கு ஒரு கிராமத்தை 3 பஞ்சாயத்து போர்டுகளிலே பிரித்துச் சேர்க்கக் கூடிய நிலைமை இருக்கிறது.

இந்த நிலைமையிலே, பஞ்சாயத்து போர்டு தேர்தலை நடத்த வார்டுகளைப் பிரிக்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கக் கூடிய ஒரு இடத்தைப் பிரித்து 2, 3 வார்டுகளில் சேர்த்து விடுகிருர்கள். முஸ்லிம்கள், மைனுரிட்டி இன மக்கள் வசிக்கும் பகுதியை ஒரு வார்டாகப் பிரிப்பதற்குப் பதிலாக 2, 3 வார்டுகளில் சேர்த்து பிரிக்கக் கூடிய நிலைமை இருக்கும் காரணத்திஞல், இன்றைய தினம் பெரிய அளவிற்கு மைனுரிட்டி இன மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே ஞாபகத்திற்குக் கொண்டு வருவதோடு தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கக்கூடிய பகுதி ஒன்ருக இருக்கவேண்டும், முஸ்லீம்கள் வசிக்கக்கூடிய பகுதி ஒன்ருக இருக்கவேண்டும், என்ற தன்மையில் பிரிக்கப்படவேண்டும் அப்படிப் பிரிக்கக்கூடிய நேரத்திலே, இதற்குப் பஞ்சாயத்து போர்டுக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். வார்டுகளைப் பிரிக்க அதிகாரம் இருக்கவேண்டியது மட்டுமல்ல, ஒரு பஞ்சாயத்துக்கு எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிருர்களோ, அதற்கு ஏற்றவாறு வோட்டர்களைச் சமமான முறையில் பங்கிட்டுத் தான் வார்டுகளை அமைக்கவேண்டும். ஏனென்ருல், இன்றைக்கு ஒரு வார்டிலே 1,000 வோட்டர்களும், இன்னொரு வார்டிலே 500 வோட்டர்களும் இருக்கிருர்கள். இந்த மாதிரி ஒரு ஏற்றத்தாழ்வு, ஒரு பாகுபாடு இருப்பதால் பல இடங்களில் தாழ்த்த நிலையில் இருக்கக் கூடிய மக்கள் வெற்றியடையக் கூடிய வாய்ப்பு இருந்தாலும் வரக்கூடிய நிலைமை இல்லாததால், வோட்டர்களைச் சரி சமமான முறையில் பங்கிட்டு வார்டுகளாகப் பிரித்து, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக் கூடிய பகுதிகளை இரண்டாகப் பிரிக்காமலும் முஸ்லீம்களை வசிக்கக்கூடிய பகுதியே இரண்டாகப் பிரிக்காமலும் வார்டுகளைப் பிரிப்பதற்கு இந்தச் சட்டத்திலே கொண்டு வந்தாலும், அல்லது விதிகளில் கொண்டு வந்தாலும், இந்த முறையில் அமையவேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

25th September 1958]

* SRI P. G. MANICKAM : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, அநேக ஹரிஜனங்கள் வாழக் கூடிய சேரிகள்—குறிப்பாக நூற்றுக்கு மேற்பட்ட ஹரிஜனங்கள் வாழக் கூடிய சேரிகள்—வார்டுகளாகப் பிரிக்கப் படும்போது இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன என்ருல், ஹரிஜன மெம்பர்கள் வரக்கூடிய செல்வாக்கைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கம் தான். ஆகையால் வார்டுகளாகப் பிரிக்கும் போது 100-க்கு மேற்பட்ட ஹரிஜனங்கள் இருக்கக்கூடிய பகுதிகளை அப்படியே வார்டாகப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI N. MARUDACHALAM : ஸார், வார்டுகளைப் பிரிக்கும் நேரத்திலே, எந்த இடத்திலே ஹரிஜனங்கள் இருக்கிருர்களோ அந்த இடத்திலே ரிஸர்வ் இடம் கிடையாது. ஹரிஜனங்கள் இல்லாத இடங்களில் ரிஸர்வ் இடம் கொடுக்கப்படுகிறது. பேரூரில், பிராமணர்கள் இருக்கும் தொகுதியில் தான் ரிஸர்வ் ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரிஸர்வ் இடம் இம்மாதிரி மாற்றிப்போடப்பட்டிருக்கிறது. இதை நேரடியாகக் கவனித்து, பெருவாரியாக ஹரி ஜனங்கள் இருக்கும் இடத்திலே ஹரிஜனங்களுக்கு இடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : கனம் தலைவர் அவர்களே, வார்டுகளைப் பிரிக்கின்ற நேரத்தில், ஒவ்வொரு வார்டையும் தனியாகப் பிரித்து, ஒரு வார்டுக்கு ஒரு உறுப்பினர் என்ற நிலைமை உண்டாக்கவேண்டுமென்று நினைக்கிறேன். ஒரு வார்டுக்கு ஒரு உறுப்பினர் என்ற நிலைமை இருந்தால் கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்டது போல ஒரு வார்டிலே 4 பேர் நின்ருல் 4 பேருக்குக் கொடுக்கப்படுகிற சீட்டுகள் ஒரு பெட்டியில் போடப்படுவதைத் தவிர்த்து, ஒரு வார்டுக்கு ஒரு அங்கத்தினர் என்ற நிலைமையை உண்டாக்க முடியும். இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் ஒரு பஞ்சாயத்தில் ஒரு வார்ட்டுக்கு ஒரு உறுப்பினர் என்ற முறையில் பிரித்திருக்கிருர்கள். அதில் ஒரே ஒரு ரிஸர்வ் இடம் வைத்திருக்கிருர்கள். 15 ஸீட்டுகளை 14 வார்டுகளாகப் பிரித்திருக்கிருர்கள். இது செப்டம்பர் மாதம் 10-ம்தேதி கெஜட்டில் நோடிபை ஆகியிருக்கிறது. அதே போன்று எல்லா இடங்களிலும் ஏற்பட்டால் சண்டை சச்சரவுகள் ஏற்படாது. ஆகவே வார்டுகளைத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதித் திராவிட மக்கள் எங்கு 50 சத வீதத்திற்கு மேல் இருக்கிருர்களோ அந்தப் பகுதிக்கு ரிஸர்வ் ஸ்தானம் கிடையாது என்ற நிலைமை இருக்கிறது. உங்களுக்குத் தனி இடம் கொடுக்கவில்லை, ஆகையால் நீங்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்று பணவசதியுள்ளவர்கள் தடுக்கின்ற நிலை இருக்கிறது. ஆகையால் அவர்கள் வருவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. அவர்கள், 'நாங்கள் செய்யவில்லை இந்தத் தவறை' என்று சர்க்கார் மீது பழி சுமத்தும் நிலைமையில் அந்த கிராமத்தில் இருக்கிற பெரியதனக்காரர்களும், தலைவர்களும், நாட்டாண்மைக்காரர்களும், மணியக் காரர்களும் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆதித் திராவிடர்கள் 11-40 a.m.
எங்கெங்கே அதிகமாக இருக்கிருர்களோ அந்த இடங்களிலெல்லாம் அவர்களுக்கு அதிகப்படியான ஸ்தானத்தை ஒதுக்கி வசதி செய்து தரவேண்டும். ஜனத்தொகை அதிகமாக இருக்கிற காரணத்தினுலே அவர்களும் நிற்கலாம் என்ற நிலைமை ஏற்படக்கூடாது. கனம் மருதாசலம் குறிப்பிட்டது போல அக்கிரகாரத்திலேதான் ஹரிஜனங்களுக்கு ரிசர்வேஷன் இருக்கிறது என்று சொன்னுர்கள். அக்கிரகாரத்திலே எதற்காக ரிசர்வேஷன் கொடுத்தார்கள் என்பது புரியவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களும் ஹரிஜனங்களுக்கு வோட்டுப் போடவேண்டுமென்பதற்காகத் தான்.

SRI A. GOVINDASAMY : அவர்கள் எப்படி ஹரிஜனங்களுக்கு வோட்டுப் போடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியும் ? அவர்களுக்கு நிற்பதற்கு வாய்ப்பு இல்லாத இடத்திலே ஹரிஜனங்களுக்கு வோட்டுப்போட

முன்வரமாட்டார்கள். சென்ற தேர்தலிலே ஜாதி இந்துக்களுடைய வோட்டுகள் அவர்களுக்குப் பரவலாக விழவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே ஆதித்திராவிடர்கள் எங்கு அதிகமாக இருக்கிறார்களோ, எங்கெல்லாம் சேரிகள் இருக்கின்றனவோ, அங்கு அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஒரு வார்டுக்கு ஒரு உறுப்பினர் என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும்.

*Sri M. S SELVARAJAN : இந்தப் பிரச்னையில் அடிப்படையாக நாம் கவனிக்க வேண்டியது, பஞ்சாயத்திற்குப் பூரண அதிகாரம் இருக்க வேண்டுமா அல்லது அதிகாரிகளிடத்தில் பூரண அதிகாரம் இருக்க வேண்டுமா என்பது தான். என்னைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்து "Consult" செய்யப்படவேண்டும் என்று இருப்பதானது முக்கியமானது. இன்றைய தினம் நிலைமை எப்படியிருக்கிறது என்றால், ஒரு சாரார் அதாவது அதிகாரத்திற்கு வரக்கூடியவர்கள், என்றென்றும் தாங்களே நிரந்தரமாக இருக்கும் வகையிலே, வார்டுகளைப் பிரிவினை செய்து, அதிகாரத்தைத் தவறாக உபயோகிப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. இன்றைக்கு ஜனத்தொகையில் பாதிக்குக் குறைவாக ஆனால் ஒரே பகுதியில் கணிசமாக இருக்கக்கூடியவர்கள், தங்களுடைய தெருக்களோடு, தங்களைப் பின்பற்றுகிறவர்களின் பல்வேறு பகுதிகளையும் இணைத்து, மற்ற வர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத வகையில் தாங்களே பெரும்பாலோர் வரும் வகையில் வார்டுகள் பிரிவினை செய்யப்பட்டிருக்கின்றன. இதை நீக்க வேண்டுமானால், பஞ்சாயத்துக்கே பூரண அதிகாரம் என்று இல்லாமல் அரசாங்க சிப்பந்திகளும் இதை ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்து கவனிக்க வேண்டியதுதான் நியாயம். பல்வேறு பகுதிகளிலே "intensive revision of wards" செய்யவேண்டியது அவசியம். இதை லோகல் அட்மினிஸ்டிரேஷன் இலாக்காவில் இருக்கக்கூடியவர்கள் மட்டும் செய்து விடக்கூடிய வேலை என்று நான் கருதவில்லை. ரெவின்யூ அதிகாரிகளின் ஒத்துழைப்பும் பெற்று, அவர்களுடன் கூட்டாக, வருகிற 5 வருஷங்களுக்குள்ளாக எவ்வளவு சீக்கிரமாக இந்த "intensive revision of wards" செய்யமுடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகச் செய்தால் நலமாகயிருக்கும் என்று கருதுகிறேன். கனம் கோதண்டராமன் அவர்கள் எடுத்துச் சொன்னது போல், நியாயப் பிரகாரம் பார்த்தாலும், இன்றையதினம் அதிகாரம் பஞ்சாயத்தின் கீழ் இருப்பதனால், ஏழை மக்களாகிய ஹரிஜனங்கள் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, சமூகத்தில் வளர்ச்சி பெறாத முறையில் இருக்கக்கூடியவர்கள் விமோசனம் பெற வேண்டுமானால், இந்த பஞ்சாயத்துக்களின் அதிகாரம் ஒருசிலர் கையில் இருக்கக்கூடாது. எப்படி "ஒற்றை மாற்று முறை" தேர்தல் மூலமாக எப்படி மைனாரிட்டிகளின் உரிமை வலியுறுத்தப்படுகிறதோ, எப்படிக் கட்சி ரீதியிலும், ஜாதி ரீதியிலும், ஆங்காங்கு இருக்கக் கூடியவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறதோ, சமூகத்திலே அதிகமான எண்ணிக்கையில் உள்ளவர்கள் என்பதற்காக ஒரு பிரிவினர் முழுமையும் வெற்றி அடையும்படியும், குறைவான எண்ணிக்கையில் உள்ளவர்கள் என்பதற்காகத் தோல்வி அடையும்படியும் இல்லாமல், மைனாரிடிகளும் தங்கள் பங்கை பெறும் வகையில் இன்றைய தினம் வாக்கு உரிமை முறையில் கூட, சில தொகுதிகளுக்கு, மூன்று வோட்டுகள், நான்கு வோட்டுகள் ஒரே வாக்காளருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பின்தங்கியவர்களும், ஹரிஜனங்களும் தேர்தலிலே வருவதற்குத் தக்க வாய்ப்பு அளித்திருப்பது தேர்தல் முறையிலே இருக்கும்படியான சிறப்பான அம்சம். புதிய வோட்டு முறை intensive revision செய்யப்படும் வரை ஓரளவு பாதுகாப்பு முறையாகும். ஆகவே "intensive revision of wards" செய்யவேண்டியது அவசியம். ஒரு முறை அதிகாரத்திற்கு வந்தவர்கள் நிரந்தரமாகப் பிடித்துக்கொண்டிருப்பதற்கு வழி இல்லாமல் பஞ்சாயத்தினிடத்திலே முற்றிலும் அதிகாரத்தை விடாமல், அரசாங்கம் தாங்களே வைத்துக்கொண்டு, ரெவின்யூ டிபார்ட்மெண்டையும் கலந்து, இந்த வார்டுகளைத் திருத்தியமைக்க வேண்டியது அவர்களின் கடமை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறேன்.

25th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, கிராமத்திலே தொகுதியை எப்படிப் பிரிப்பது என்பதைப் பற்றி இங்கே பலவேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குறைந்த பட்சம் 500 பேர் ஜனத்தொகை இருந்தாலும் கூட அதற்கு ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்த இடமிருக்கிறது. அப்படி ஏற்படுத்தும்பொழுது ஐந்து அங்கத்தினர்களாவது அதிலே இருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் 100 ஜனத் தொகைக்கு ஒரு அங்கத்தினர் ஆகின்றது. சிறு சிறு தொகுதிகளாகப் பிரிக்கலாம். சிறு தொகுதிகளாகப் பிரிப்பது நல்லதா, அல்லது பெரிய தொகுதிகளாக வைத்துக் கொள்வதா என்பதைப் பற்றி கருத்து வேறுபாடுகள் இருப்பதற்கு இடமிருக்கிறது. அதே மாதிரி பல அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய இரட்டைத் தொகுதியாகவோ, மூன்று பேர்கள் கொண்ட தொகுதியாகவோ ஏற்பாடு செய்கிற நேரத்திலே, வோட்டுப் போடுகிற முறையில், ஆளுக்கு ஒரு வோட், எத்தனை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமோ அத்தனை வோட்டுகள் கொடுத்து, ஒருவர் ஒரு வோட்டைத் தான் போடலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வோட் போட முடியாது என்று செய்யலாம். இன்னொன்று " cumulative voting " முறை. அதாவது, மைனாரிட்டிகளுக்குச் சாதகமாக இருக்கக்கூடிய முறையிலே, ஒரு மைனாரிட்டிப் பகுதியினர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமானால், இது மாதிரி பல அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய தொகுதியிலே, " cumulative voting " முறையின் காரணமாக, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க முடிகிறது. இதிலே இருக்கக்கூடிய சாதக பாதகங்களை நல்ல முறையில் பரிசீலனை செய்து பார்த்து, விதிகள் அமைக்கிற காலத்திலே மறுபடியும் பரிசீலனை செய்து, சட்டசபை அங்கத்தினர் குழு முன்னே வைத்து, அதற்குப் பிறகு சட்டசபை முன்னரும் வைத்து அதற்குப் பிற்பாடுதான் விதிகள் அமைப்பதற்கான இடமிருக்கிறது. ஆகையால், அந்த சமயத்தில் இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து கொள்ளலாம். இப்பொழுது பலவேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதை மனதில் கொண்டு, இந்தப் பிரிவினை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு, இந்தப் பிரிவை இப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Clause 16 was put and carried.

Clause 17.

MR. SPEAKER : The motion is—

" That clause 17 *do* stand part of the Bill."

SRI P. S. CHINNADURAI : Sir, I move—

" In sub-clause (1), *for* the words ' five years ' *substitute* the words ' three years.' "

SRI K. R. NALLASIVAM : I second the amendment, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That in item (*c*) of sub-clause (3), *for* the word ' three ' *substitute* the word ' six '.

* SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து மெம்பர்களுடைய பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகள் என்று இருப்பதற்குப் பதிலாக மூன்று ஆண்டுகளாக நிர்ணயிக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். நகரசபை அங்கத்தினர்களுடைய பதவி காலத்தை மூன்று ஆண்டுகள் என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். அப்படியானால், பஞ்சாயத்து அங்கத்தினர்களுடைய பதவிக் காலத்தை மாத்திரம் ஐந்து ஆண்டுகள் என்று ஏன் நாம் தீர்மானிக்க வேண்டும்? நகரங்களிலே உள்ள வாக்காளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு

ஒரு முறை தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, கிராமங்களிலே உள்ள வாக்காளர்கள் அதே உரிமையை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் பெறவேண்டுமா என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டி
11-50 a.m. ருக்கிறோம். நகரங்களிலே வாழ்கின்ற மக்களுக்கும், கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்கும் மத்தியிலே இவ்வளவு பெரிய ஒரு பாகுபாட்டை எதற்காக நிர்ணயிக்கவேண்டும்? இதற்கு என்ன நியாயமான காரணம் இருக்க முடியும் என்று ஆட்சியாளர்தான் பதில் சொல்லவேண்டும். ஆரம்பத்திலே ஐந்து ஆண்டுகள்தான் நகரசபை அங்கத்தினர்களுக்கும், கிராம பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கும் பதவிக் காலம் நிர்ணயிக்கப்படும் என்ற ஒரு முறையிலே ஒரேயடியாக வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். பின்னர் கடைசியாக சென்னை நகரசபையை பற்றிய விஷயம் விவாதத்திற்கு வரும்பொழுது பதவிக் காலம் ஐந்தாண்டு இருந்ததை மூன்று ஆண்டு என்று நிர்ணயிக்கப்பட்டது. சென்னை நகரத்திலே நகரசபை எல்லைக்குள்ளே இருக்கும் மக்களுக்கு ஒரு வகையான உரிமையும், தொலைவிலுள்ள கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு இன்னொரு விதமான உரிமையும் இருக்க வேண்டுமா? கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்களிப்பதற்கு அருகதையற்றவர்கள் என்று நாம் கருதுகிறோமா ? கிராமத்தில் வாழ்கின்ற மக்களைக் காட்டிலும், நகரத்தில் இருப்பவர்கள் அதிகப்படியான ஜனநாயக உரிமையை அனுபவிப்பதற்கு இயல்பாகவே உரிமைபெற்றவர்கள், அதற்குத் தகுதியுடையவர்கள் என்று கருதப்படுகிறதா என்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை.

சாதாரணமாக பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்படுவதுதான் சரியானது என்று நான் வலியுறுத்தும்பொழுது, சட்டமன்ற அங்கத்தினர்களின் பதவிக் காலம்கூட ஐந்து ஆண்டுகள் என்று இருக்கிறதே, இதை மூன்று ஆண்டுகளாக குறைக்கக்கூடாதா என்று கேட்கலாம். அதை தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் இந்தச் சபைக்கு இருக்குமேயானால், அது மூன்று ஆண்டுகளாக நிர்ணயிக்கப்படுவது சரியானது என்று நான் உறுதியாகச் சொல்வதற்கு முடியும். அந்த அதிகாரம் இந்தச் சபைக்கு இல்லாத காரணத்தினால், அதுபற்றி நான் அதிகமாக விவரித்துப் பேச விரும்பவில்லை. மூன்று ஆண்டுகள் நிர்ணயிக்கப்படுவதற்கு எத்தனையோ உதாரணங்கள் இதற்கு முன்பு இந்தச் சபையில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. அதை அப்பொழுது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது அரசாங்கத்திற்கு ஒருவகையான பிடிவாத உணர்ச்சி இருந்தது. அந்தப் பிடிவாத உணர்ச்சியின் காரணமாக அவர்கள் அதை அன்றைக்கு ஏற்கவில்லை. ஐந்து ஆண்டுகள்தான் சரியானது என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். அதேபோல் நகரசபை அங்கத்தினர்களுடைய பதவிக் காலத்தையும் செய்துவிடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். என்ன காரணம் பற்றியோ சென்னை நகரசபை அங்கத்தினர்களின் பதவிக் காலத்தை மாத்திரம் மூன்று ஆண்டுகளாக நிர்ணயித்துக்கொண்டிருக்கிறார்கள். என்ன நிர்பந்தம் காரணமாக அவர்கள் பிடிவாதத்தை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது என்பதெல்லாம் சரியாகத் தெரியவில்லை. நகரசபை சம்பந்தமாக எடுத்துக்கொண்டிருக்கும் அந்த முடிவை கிராம பஞ்சாயத்துகள் விஷயத்திலும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் இயல்பாகவே எதிர்பார்க்கிறேன். என்னுடைய திருத்தம் ஒரு சாதாரணமான திருத்தம். இந்தச் சபைக்கு அதைப் பற்றி எந்த ஆட்சேபணையும் இருக்க முடியாது என்று கருதி, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

*SRI M. P. SUBRAMANIAM : அய்யா, கனம் சின்னதுரை அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நானும் வரவேற்கிறேன். ஐந்து ஆண்டு காலம் இருப்பதை மூன்று ஆண்டுகளாகக் குறைப்பது நல்லது தான். அம்மாதிரி மூன்று ஆண்டுகளாக இருப்பது நல்லது என்பதற்கு இந்த அவையிலே பல காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் என் பிடிவாதமாக ஐந்து ஆண்டுகள் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்பது தெரியவில்லை.

25th September 1958] [Sri M. P. Subramaniam]

மற்றென்று நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றல், 17-வது பிரிவிலே பஞ்சாயத்து தேர்தல் எந்தக் காலத்தில் வேண்டுமானுலும் நடக்கலாம் என்று இருக்கிறது. ஆனல் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அங்கத்தினர்களின் பதவிக் காலம் தமிழ் வருஷப் பிறப்பு தினத்தன்று ஆரம்பமாகி, தமிழ் வருஷப் பிறப்பு தினத்தன்று முடிவாகும். ஐந்து ஆண்டுகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தக்கப்படி மாற்றி அமைக்கவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கு அரசாங்கம் ஒரு திருத்தம் கொண்டுவருகிறது.

SRI M. P. SUBRAMANIAM : அதற்குத் திருத்தம் வருகிறது என்றல் அது பற்றி நான் வற்புறுத்தவில்லை.

SRIMATHI KAMALAMBUJAMMAL : சர்க்கார் கொண்டு வந்திருக்கும் திருத்தத்திலே ஆறு மாதம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதுதான். ஆனல் "unless the Inspector otherwise directs" என்ற வார்த்தைகள் இருக்கவேண்டுமா என்பதுபற்றி அரசாங்கம் யோசித்து, அது வேண்டாம் என்று முடிவு செய்தால் அது நலமாக இருக்கும் என்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY : ஏதாவது காலி ஸ்தானம் ஏற்பட்டால், பதவிக் காலம் முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு மேல் இருந்தால், எலெக்ஷன் நடத்தலாம் என்று இருப்பதை சர்க்கார் ஆறு மாதங்களாக ஆக்கவேண்டு மென்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அதை எதிர்க்கிறேன். மூன்று மாதங்கள் என்று இருப்பதே சரியானது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த பஞ்சாயத்துகளுடைய ஆயுள் காலம் எவ்வளவு ஆண்டு காலம் இருக்கவேண்டுமென்று நிர்ணயிப்பதில் கொள்கை ஒன்றுமில்லை. மூன்று வருஷங்களாகவும் வைக்கலாம். நான்கு வருஷங்களாகவும் நிர்ணயிக்கலாம். ஐந்து வருஷங்களாகவும் நிர்ணயிக்கலாம். ஆறு வருஷங்களாகவும் வைக்கலாம். எல்லோரும் இதை ஆலோசனை செய்து ஐந்து வருஷங்களாக இருப்பது சரி என்று ஒப்புக்கொண்டார்கள். அதனுல்தான் ஐந்து ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏன் நான்கு வருஷங்களாக இருக்கக்கூடாது? அதற்கும் ஏதாவது காரணங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) அண்ணுதுரை அவர்கள் "பஞ்சாயத்து" என்று இருப்பதால் "பஞ்ச" என்றல் ஐந்து என்று பொருள்படுமாதலால், ஐந்து ஆண்டுகளே வைப்பது நல்லது என்று சொல்லுகிறார். அதேபோல் எத்தனையோ காரணங்கள் வேண்டுமானல் சொல்லலாம். ஏன் இதை $3\frac{1}{2}$ வருஷங்களாக வைக்கக்கூடாதா? $4\frac{1}{2}$ வருஷங்களாக வைக்கக் கூடாதா? முழு வருஷங்களாகத்தான் இருக்கவேண்டுமென்று ஒன்றுமில்லை. ஆகவே, சின்னதுரை அவர்கள் இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவருடைய திருத்தத்தை நான் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக, கடைசியாக பதவி காலம் முடிவதற்கு மூன்று மாதங்கள் இருப்பதற்கு முன்னல் ஒரு காலி ஸ்தானம் ஏற்பட்டால் அதற்காக ஒரு எலெக்ஷன் கடைசி காலத்தில் வைப்பது அவசியமில்லை என்று கருதி, ஆறு மாத காலத்திற்கு முன்னல் காலி ஸ்தானம் ஏற்பட்டாலொழிய உப தேர்தல் நடத்த வேண்டிய அவசியமில்லை என்று திருத்தம் கொடுத்திருக்கிறோம். அப்படி ஆறு மாத காலத்திற்குள் ஏதாவது காலி ஸ்தானம் ஏற்பட்டால், அதற்காக ஒரு உப தேர்தல் நடத்தாமல் மற்றும் இருக்கிற அங்கத்தினர்களை வைத்துக்கொண்டு இந்த ஆறு மாத காலத்திற்கு பஞ்சாயத்தை நடத்திவிட்டு, பிறகு கடைசியில் எல்லா ஸ்தானங்களுக்கும் சேர்த்து தேர்தல் நடத்தலாம். மற்றென்று, 'Unless the Inspector otherwise directs' என்ற வார்த்தைகள் இருக்க வேண்டியது அவசியமில்லைதான். இருந்தாலும், இன்ஸ்பெக்டர்கள் அந்த அதிகாரத்தை

அனுவசியமாக உபயோகப்படுத்தமாட்டார்கள். அதற்காக இப்பொழுது புதியதாக ஒரு திருத்தத்தை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

The amendment moved by Sri P. S. Chinnadurai was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 17, as amended, was put and carried.

Clause 18 was put and carried.

Clause 19.

MR. SPEAKER : The motion is—

"That clause 19 *do* stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"(i) In sub-clause (1), *for* the words "beginning and expiring at noon on Tamil New Year day" *substitute* "beginning on such date as may be notified by the Inspector in the case of each panchayat union Council."

(ii) in sub-clause (2)—

(*a*) *for* the words "on such day or days in the months of January and February next preceding the vacancies as he thinks fit" *substitute* "on such day or days as may be notified by the Inspector in this behalf the case of each panchayat union council";

(*b*) *Omit* the first proviso;

(*c*) in the second proviso, *omit* "further" and "and the Inspector shall give effect to such direction";

(iii) in sub-clause (4), *for* the word "three" *substitute* "six"."

(iv) in sub-clause (4), after the words "filled at" *insert* 'a".

SRI M. P. SUBRAMANIAM : அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் எந்தக் காலத்தில் அமைக்கப்படுகிறதோ, அதே காலத்தில் அந்த வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தினால்தான், எல்லா அங்கத்தினர்களும் ஒன்று சேரு வார்கள். அதுபற்றி இந்தப் பிரிவில் ஒன்றுமில்லை. அதுபற்றி ரூல்கள் ஏற்படுத்தப்படும் என்று நினைக்கிறேன். இருந்தாலும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரே காலத்தில் தேர்தல் நடத்தினால்தான், பிறகு அந்த மெம்பர்கள் சேர்ந்து யூனியன் கவுன்சில் அமைப்பதற்கு வழி வகை ஏற்படும். அதற்கான விதியை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, கனம்
12 noon. அங்கத்தினர் ஸ்ரீ சுப்பிரமணியம் கருத்து சரியான கருத்துத்தான். ஆனால், அது முதலிலிருந்தே நடைமுறையிலே செய்வது என்பது கஷ்டமாக இருக்கும். இது போகப்போகப் பின்னால் செய்து கொள்ளலாம். அனுபவத்தை அனுசரித்து போகப் போக பஞ்சாயத்துக்களுக்கும், யூனியன்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல். என்று வைத்துக்கொள்ள முயற்சிக்கலாம்.

25th September 1958]

The amendment was put and carried.

Clause 19, as amended, was put and carried.

Clause 20.

MR. SPEAKER : The motion is—

"That clause 20 *do* stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"In the clause, *omit* sub-clause (2) and *re-number* sub-clauses (3) to (6) as sub-clauses (2) to (5) respectively."

"In the Explanation occurring at the end of clause 20, *for* the expression 'by order made under section 9 of the Reppresentation of the People Act, 1950 (Central Act XLII of 1950), *substitute* 'by law'."

"In sub-clause (4) as re-numbered, *for* the words 'sub-section (3)' occurring in line 2, *substitute* 'sub-section (2)'."

*SRI M. S. SELVARAJAN : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துகளில் தயாரிக்கப்படுகிற வோட்டர் ஜாபிதாவுக்கு முழுப் பொறுப்பும் நம் ராஜ்ய சர்க்காரைச் சேர்ந்ததல்ல என்றாலும், ராஜ்ய சர்க்கார் தலையிட வேண்டிய அளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. அச்சுப் பிழையாக இருக்கலாம். ஆனால், தேர்தல் காலத்தில், மிகவும் தலையிடி கொடுக்கக் கூடிய பயங்கர விளைவுகள் ஏற்படக்கூடிய தவறுகள் மலிந்து இருக்கின்றன. தேர்தலில் ஒரு தரம் வந்தவர்கள், தங்கள் இஷ்டப்படி திருத்திக் கொள்ளுவதற்கும், சேர்த்துக் கொள்ளுவதற்கும், நீக்கிக் கொள்வதற்கும், அவர்களுக்குச் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது. வெளியில் உள்ளவர்களை விட, தங்கள் கீழ் வேலை செய்யும் சிப்பந்திகளைக் கொண்டு தயாராகும் வோட்டர் ஜாபிதா பல குற்றங்கள் உள்ளதாக அமைந்து விடுகிறது. ஆர்.டி.ஓ. போன்ற ரெவின்யூ அதிகாரிகள், அவற்றைச் சரி பார்த்துச் செய்யவேண்டுமென்றாலும், அவர்களால் அது முடியவில்லை. ஒரு நிமிஷத்தில், ஒரு வாரத்தில், பல ஆயிரக் கணக்கான வோட்டர்கள் சேர்க்கப்படுவதும், நீக்கப்படுவதும் நடக்கக்கூடிய அவல நிலை பல பஞ்சாயத்துக்களில் இருக்கிறது.

1957-ம் வருஷ ஜாபிதாப்படி பல தேர்தல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடந்த தேர்தல்கள் போக, இனி நடக்கவிருக்கும் தேர்தல்களுக்காவது, ஒரு வரையறை கட்ட வேண்டும். குறிப்பிட்ட வருஷத்திலே தயாரிக்கப்பட்ட ஜாபிதாதான் குறிப்பிட்ட தேர்தலுக்கு என்று இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வப்பொழுது தயாரிக்கப்படும், மாற்றப்படும் ஜாபிதாக்கள்தான் தொல்லை கொடுக்கும். இம்மாதிரியான ஜாபிதாக்கள், பில் கலெக்டர்களால் தயாரிக்கப்படுகின்றன. அவர்கள் தயாரிக்கும் லிஸ்டை எக்ஸிகியூடிவ் ஆபீசர்கள் யாரையும் கேட்காமல் தங்கள் இஷ்டம்போல் மேல் கையெழுத்திடுவதைத் தவிர வழியில்லை. நிர்வாகத்திலுள்ளவர்கள் நிமிஷத்தில் ஆயிரக்கணக்கான வோட்டர்களைச் சேர்த்தும், நீக்கியும் செய்கிறார்கள். சம்பந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகள் வீடு, வீடாகச் சென்று இதையெல்லாம் சரிபார்க்க முடியாது. அவர்களுக்கு அவகாசம் கிடையாது. அவர்கள் என்ன செய்கிறார்கள் ? பல மைல் நீளமுள்ள விபரமான பாரங்களின் சேர்க்கை நீக்கல் ஆட்சேபணை செய்யப்படவேண்டும். ஒரு பெரிய லிஸ்டைப் போட்டுவிட்டு, ஆட்சேபம் உள்ளவர்கள் தெரிவிக்கலாம் என்கிறார்கள். இதை யார் படித்து சரிபார்த்துச் சொல்லுவது ? அப்படிச் செய்யக் கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ? ஆகவே, இந்த ராஜ்யத்தின் வோட்டர் லிஸ்டுகளை எல்லாம் இண்டென்ஸிவ் ரிவிஷன் செய்யவேண்டும்.

[25th September 1958

*SRI V. SANKARAN : தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரு மனிதன் வோட்டராக இருந்தால், அவனுக்கு இரண்டு உரிமைகள் கொடுக்கப்படுகின்றன. வோட்டுப் போடும் உரிமை ஒன்று, தானே மெம்பராக இருக்க முடியும். அந்த முறையில் ப்ரொவிஷன் செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஒருவன் ஒரு இடத்திற்குமேல் இரண்டு பஞ்சாயத்தில் இருக்க முடியாது என்றிருக்கிறது. அதே சமயத்தில், இரண்டு பஞ்சாயத்துக்களில் வோட்டராக இருக்கக்கூடாது என்று இல்லை. ஆகவே, ஒருவர் இரண்டு, மூன்று பஞ்சாயத்துக்களில் வோட் செய்யும் நிலைமை ஏற்படலாம். அதைத்
12-10 p.m. தடுக்க ஒரு ப்ரொவிஷன் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது. வோட்டர் லிஸ்டை எடுத்துக் கொண்டால் சாதாரணமாக அசெம்பிளி தொகுதியில் வோட்டர் லிஸ்ட் இருப்பது போல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. சாதாரணமாக நகரங்களில் இருக்கக்கூடிய வோட்டர் லிஸ்டைப் பார்த்தால் ஒரே தெருவில் இரண்டு மெம்பர்களுக்கு தொகுதியாக இருக்கும். சாதாரணமாக சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் மௌண்ட் ரோடு இருக்கிறது. ஒரு மெம்பருக்கு அந்த ரோடில் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் தொகுதி இருக்கும். பக்கவாட்டில் மற்ற மெம்பருடைய தொகுதி இருக்கும். ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் ஒரு தெரு ஒருவருக்கே இருக்க வேண்டும். அம்மாதிரி இப்பொழுது இருப்பதால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஒரே தெருவில் ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும் இருப்பதால் ஒரு சில பர்லாங்குகள், மைல்கள் நீளம்போகும் அவ்வாறின்றி பிரித்து அந்த அந்த பிளாக்குகளுக்கும் சேர்க்கவேண்டும். அவைகளை தவிர்ப்பதற்கு ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் இருப்பது நல்லது என்று தோன்றுகிறது. கனம் செல்வராஜன் சொன்னதுபோல் ஏற்கெனவே பல கஷ்டங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கஷ்டங்கள் இனிமேலாவது ஏற்படாத வண்ணம் வோட்டர் லிஸ்டைத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வோட்டர் ஜாப்தா தயாரிப்பதில் பல கஷ்டங்களும் சங்கடங்களும் ஏற்படுகின்றன. இதைப்பற்றி பல அங்கத்தினர்கள் பல தடவை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது தயாரிக்கப்படுகிற லிஸ்டைப் பார்த்தால் அவற்றில் இரண்டு மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அவைகளைப் பார்த்து கிராமவாசிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை. சாதாரணமாக தேர்தலுக்கு முன்னதாக வோட்டர் லிஸ்டைத் தயாரிக்கிறார்கள். அதன் பிறகு அதில் சேர்க்க வேண்டியவைகளையும், நீக்க வேண்டியவைகளையும் சேர்த்தும் நீக்கியும் மறு லிஸ்ட் தயாரிக்கிறார்கள். அப்படித் தயாரிப்பதால் பல வித வித்யாசங்கள் ஏற்படுகின்றன. ஆண்களுக்கு பெண்கள் என்றும் பெண்களுக்கு ஆண்கள் என்றும் எழுதி தயாரிக்கிறார்கள். அதனால் தேர்தல் காலங்களில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட எவ்வளவோ ஆபாசமான முறையில் லிஸ்டை தயாரிக்கிறார்கள். முன்னால் தயாரித்த லிஸ்டில் தகப்பன் பெயர் ஒருவிதமாக இருக்கும். பின்னாடி தயாரித்த லிஸ்டில் தகப்பன் பெயர் வேறு விதமாக இருக்கும். லிஸ்டில் ஆணா அல்லது பெண்ணா என்று இருக்கும் பிரிவில் ஆண் என்று எழுதுவதற்குப் பெண் என்று எழுதியும், பெண் என்று எழுதுவதற்குப் பதிலாக ஆண் என்றும் எழுதப்படுகிறது. இப்படிப்பட்ட பல தவறுகள் நடைபெறுகின்றன. கனம் செல்வராஜன் அவர்கள் சொன்னதைப்போல், ஆசிரியர்களைக் கொண்டும், சற்று ஓய்வு எடுத்துக்கொண்டவர்களைக் கொண்டும் தயாரிக்கக் கூடிய லிஸ்டாக இருப்பதால் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, இப்படி இரண்டு மூன்று லிஸ்டுகளைத் தயாரிக்காமல் மறுபடியும் ஒரே லிஸ்டாக தயாரிக்கவேண்டும். அப்படித் தயாரிப்பதற்கு தனியாகவே அதிகாரிகளை நியமித்து அந்த அதிகாரியின் கீழ் சில சிப்பந்திகளை நியமித்து அவர்களுக்கு இந்த முழுப் பொறுப்பையும் கொடுத்து இந்த லிஸ்டை தயாரிக்கச் சொன்னால் ஓரளவு நல்ல முறையில் தயாரிக்க முடியும். இப்பொழுது இருக்கக்கூடிய லிஸ்டுகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரே லிஸ்டாகத் தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பின்னாடி சேர்க்க வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம், நீக்க வேண்டுமானால் நீக்கிக்கொள்ளலாம். இப்படிச் செய்தால் ரொம்பவும் சுலபமாக இருக்கும்.

25th September 1958] [Sri M. R. Kandaswami Mudaliyar]

எவ்வளவோ இடங்களில் ஆயிரக்கணக்கான வோட்டர்கள் சேர்க்க வேண்டியவர்கள் சேர்க்கப்படாமலும், வோட்டர்களே இல்லாத இடங்களில் ஆயிரக்கணக்கான வோட்டர்கள் இருப்பதாகவும் லிஸ்டுகள் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. வீடுகளே இல்லாத இடங்களில் பல வோட்டர்கள் இருப்ப தாக லிஸ்டில் இருக்கிறது. அங்கே ஊரே இருக்காது, ஆனால் வோட்டர்கள் அநேகமாக இருப்பார்கள். தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து புதியதாக லிஸ்டைத் தயாரித்தால் இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் சரிப்படுத்த முடியும். சரியான பொறுப்புள்ளவர்களை நியமித்து வேலை செய்தால் நல்ல முறையில் லிஸ்டைத தயாரிக்க முடியும். இதற்காக ஆயிரக்கணக் கான ரூபாய் அல்லது லட்சக்கணக்கான ரூபாய் செலவாகலாம். அரசாங் கத்திற்கு இப்பொழுது நெருக்கடியாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தச் செலவை செய்யலாமா என்று தோன்றலாம். இதனால் வரக்கூடிய கெடு தலைப் போக்குவதற்கு இப்படிச் செலவு செய்வதனால் பாதகம் இல்லை. தேர்தல் நடந்த பிறகு இப்படிப்பட்ட தவறுகள் இருப்பதால் பல தேர்தல் கள் ரத்தாகி விடுகிற காரணத்தால் இப்படிப்பட்ட செலவை சர்க்கார் செய்து தான் ஆக வேண்டும். எத்தனையோ தேர்தல்கள் கான்சல் செய்யக்கூடிய அளவில் இருப்பதால் இதற்கு என்று செலவு செய்வது வீணாகாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, முழு விவரத்தையும் கொண்ட ஒரு லிஸ்டை நல்ல முறையில் தயாரிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக முஸ்லிம்கள் இருக்கக்கூடிய இடங்களில் கோஷா ஸ்திரீ கள் இருப்பதால் அங்கேயெல்லாம் அதிகப்படியாக வோட்டர் பதிவு செய்யப் படுகிறது. அவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் சரியானபடி லிஸ்டைத் தயாரிப்பது இல்லை. அவர்கள் நேரில் சென்று பதிவு செய்ய முடியாமல் இருப்பதால் இப்படி ஏற்படுகிறது. ஒரே பெயர் மூன்றாவது வார்டிலும் இருக்கும், நாலாவது வார்டிலும் இருக்கும். இப்படிப் பார்த் தால் ஆயிரக்கணக்கான வோட்டர்கள் அதிகமாக இருப்பார்கள். ஆனால் ஜனத்தொகை கணக்கில் பார்த்தால் அங்கே அவ்வளவு ஜனத்தொகை இருக்காது. இதைப்பற்றிக் கேட்டால் அவர்கள் வேறு எங்கேயோ இருக் கிறார்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இப்படி இப்பொழுது சேலம் டவுனில் சுமார் 1,300 அல்லது 1,400 வோட்டர்களைப் பார்க்கலாம். இம் மாதிரியே பல இடங்களிலும் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நன்றாகப் பரிசிலனை செய்து புதிய லிஸ்டாக தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி கோஷா ஸ்திரீகள் இருக்கக்கூடிய இடங் களில் முஸ்லீம்களைப் போட்டு சரியானபடி கணக்கு எடுக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த முறையில் லிஸ்ட் எடுக்க ஏற்பாடு செய்தால் வசதியாக இருக்கும். இப்படி அதிகப்படியான வோட்டர்கள் இருக்கிறார்கள். அதுவும் கோஷாக்களாக இருக்கிறார்கள் என்பதை பயன் படுத்திக்கொண்டு அந்த ஏரியாவில் ஒரு கட்சிப் பிரதிநிதியே அடிக்கடி தேர்ந்தெடுத்து வரக்கூடியதாக ஏற்படுகிறது. அரசியல் கட்சிக்கு மாறுபட்ட கருத்துக்களை உடையவர்கள் வருவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. அவர்களுடைய வீடுகளில் பிறர் நுழைய முடியாத காரணமாக இருப்பதால் இப்படிப்பட்ட லிஸ்டுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஏரியாவில் இப்படி அதிகமாகத் தயாரித்திருப்பதால் தங்களுடைய தொகுதியில் சுமார் 400 அல்லது 500 வோட்டுகள் அதிகமாக வரக்கூடியதாக ஏற்படுகிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே மாதிரி ஊர்களைப் பிரிக்கும் காலங்களில் கிராமம் கிராமமாக லிஸ்டுகளைத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரே லிஸ்டில் இரண்டு மூன்று கிராமங்களை சேர்ப்பதால் பல கஷ்டங்கள் ஏற்படு கின்றன. ஒரு ஊருக்கு என்று தனியாக லிஸ்ட் தயாரித்தால் அந்த ஊரிலுள்ளவர்களுக்கு எல்லா விவரமும் நன்றாகத் தெரிய வரும். ஊர் ஊராக லிஸ்டுகளைத் தயாரித்தால் நலமாக இருக்கும். இப்பொழுது ஆட்டை யாம்பட்டி கிராமத்தின் லிஸ்டைப் பார்க்க வேண்டுமானால் அத்துடன் வேலநத்தம், மரளியம்பாளையம், பாப்பான்பட்டி கிராமங்களின் லிஸ்டையும் சேர்த்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி வாங்கிப் பார்த்தால்

வோட்டர்களுடைய பெயரைக் கண்டு பிடிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கிராமம் கிராமமாகத் தனித்தனியாக லிஸ்டுகளை தயாரித்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லா கிராமங்களையும் சேர்த்து ஒரே லிஸ்டாக தயாரிக்கப்படுவதால் அதை கண்டு பிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. வோட்டர்களுடைய பெயரைக் கண்டு பிடிப்பதற்கும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கிராமம் கிராமமாக லிஸ்டு தயாரித்து வரிசையாக வோட்டர்களின் பெயரை அச்சடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

அத்துடன் கந்தசாமி என்பருவடைய பெயருக்குப் பக்கத்தில் ஒரு கமா இல்லை என்பதற்காக அவரை வோட்டு செய்ய விடாமல் தேர்தல் அதிகாரிகள் அனுப்பிவிடுகிறார்கள். இது உங்களுடைய பெயர் இல்லை என்று சொல்லி வோட்டுச் செய்வதற்கு மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட சாதாரண தவறுகளுக்கும் அதிகாரிகள் அனுமதி கொடுக்காமல் இருப்பதால் பலர் வோட்டு செய்யமுடியாமல் போய் விடுகிறார்கள். அப்படி இல்லாமல் சிறு சிறு பிழைகள் இருந்தால் அதைப் பொருட்படுத்தக்கூடாது என்று தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவு போட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். கூடுமானவரையில் சரியாக இருந்தால் அவர்களை வோட்டு செய்ய அனுமதிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். அந்த விதத்தில் அதிகாரிகளுக்கு உத்தரவு போட வேண்டும். அல்லது அவர்களுக்கு அந்த முறையில் எச்சரிக்கை செய்ய வேண்டும்.

ஆகவே, வோட்டர் லிஸ்டை ஒரே லிஸ்டாகத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அப்படிச் செய்தால்தான் நலமாக இருக்கும் என்றும் சொல்லிக் கொண்டு அந்த முறையில் வேண்டிய விதிகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY: கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் இருக்கிற ஷரத்துப்படி ஒருவருக்கு ஓர் இடத்தில்தான் வோட்டு இருக்க வேண்டும் என்பது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் கனம் சங்கரன் அவர்கள் கூறுகிற கருத்து அவ்வளவு சிறந்தது அல்ல. இரண்டு மூன்று வீடுகள் இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு வீட்டிலும் வோட்டு இருக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அந்த நிலைமை ஏற்பட்டால் ஒருவன் ஓர் இடத்தில் நின்று தேர்தலில் தோற்றுப்போய் விட்டால் மறுபடியும் வேறு இடத்தில் நின்று போட்டியிட வழி செய்வதாகும். ஆகவே, ஓர் இடத்தில் ஒருவருடைய பெயர் இருந்தால்போதும். ஏதாவது ஒரு கிராமத்தில் ஓர் இடத்தில் வோட்டு பதிவு செய்திருக்கிற நிலைமை இருந்தால் போதுமானது. ஒருவருக்கு வீட்டில் வோட்டு பதிவாகி இருக்கும். அவர் கடையில் இருக்கும்போது அங்கே வோட்டு பதிவு செய்கிற அதிகாரி வரும்போது அங்கேயும் பதிவு செய்து கொள்ள இடம் இருக்கும். இப்படி இரண்டு இடங்களிலும் தன்னுடைய ஒரே வோட்டை பதிவு செய்துகொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். அதையெல்லாம் தடுத்து ஏதாவது ஓர் இடத்தில் பதிவு செய்துகொள்ளுகிற நிலைமை ஏற்பட வேண்டும்.

வோட்டு பதிவு செய்ய வருகிறவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்களாக இருப்பதால், அவர்களுக்கு நல்ல முறையில் எந்த விதமான ஊதியமும் தரப்படாத நிலைமையில் இருப்பதால் இப்படி அவர்கள் தவறுகளைச் செய்கிறார்கள். அப்படி இல்லாமல் அவர்களுக்கு ஏதாவது அலவன்சு கொடுத்து வேண்டியதைச் செய்து கொடுத்தால் அவர்கள் இந்த வேலையை நல்ல விதத்தில் செய்ய முடியும். சில இடங்களில் ஆண் என்பதற்குப் பதிலாக பெண் என்று எழுதப்பட்டிருக்கும். பெண் என்று போடுவதற்கு பதிலாக ஆண் என்று போட்டிருப்பார்கள். அப்படி போட்டிருப்பதால் வோட்டுச் செய்ய வரும்போது பல தகராறுகள் ஏற்படுகின்றன. தேர்தல் அதிகாரி இதை வைத்துக்கொண்டு அவரை வோட்டுச் செய்ய விடாமல் தடுத்து விடுகிறார்கள். கட்சித் தகராறினாலும் அவரை வோட்டுச் செய்ய அனுமதிப்பதில்லை. இதைத் தவிர பல அச்சுப் பிழைகளாலும் வோட்டு செய்ய விடாமல் தடுத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு இந்த வோட்டர் லிஸ்டை

25th September 1958] [Sri A. Govindasamy]

நல்ல முறையில் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் கந்தசாமி முதலியார் சொன்ன மாதிரி இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து வோட்டர் லிஸ்ட் தயாரிக் கிறார்கள். அப்படி இல்லாமல் தனித்தனி கிராமங்களுக்கு தனித்தனி லிஸ்டு இருக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து மதுரா என்று பெயர் போடாமல் தனித்தனியாக லிஸ்ட் தயாரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தந்த இடத்தைத் தெரிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். இல்லாவிட்டால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதனால் இதை கவனித்து தனித்தனியாக கிராமத்தைப் பிரித்து தனி லிஸ்டாகத் தயாரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தெருத் தெருவாக் பிரித்து எழுதவேண்டும் என்று நான் ஒரு திருத்தம் கொடுத்தேன். அது சாத்தியம் இல்லை என்ற கருத்தை அமைச்சர் அவர் கள் தெரிவித்ததால், தனித்தனி மதுராவாக, தனித்தனி கிராமமாகப் 12-20 p.m. பிரித்து வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதுவும் தவிர வாக்காளர்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப் போகின் றவர்கள், இரவு 7 மணியிலிருந்து இரவு 9 மணிக்குள் போவார்களானால் ஏராளமான பெயர்கள் விடப்படாமல் எல்லோரும் வோட்டளிப்பதற்கு வகை ஏற்படும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், விவசாயிகள் பெரும்பாலும் வயல்களுக்கு அதிகாலையிலேயே வீட்டைவிட்டுப் போய் இரவு சுமார் 7 மணிக்குத் தான் திரும்புகிறார்கள். அப்படி அவர்கள் வயல்களில் வேலை செய்யப் போயிருக்கும்போது, வாக்காளர் பட்டியல் தயார் செய்கின்றவர்கள் அவர்களுடைய வீட்டுக்குப் போய், வீடு பூட்டி யிருப்பதைக் கண்டு, பெயர்களைப் பதிவு செய்யாமல் வந்து விடுகிறார்கள். இதனால் பெரும்பாலான விவசாயிகளின் பெயர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அதேபோல் ஆலைகளில் வேலை செய்யப் போகின்றவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கு ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்களுடைய வீடுகளுக்குப் பதிவு செய்கின்றவர்கள் சென் றால் அவர்களுடைய பெயர்களும் பட்டியலில் இடம் பெறுவதற்கு உதவி யாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படியெல்லாம் பெயர்கள் விடப்பட்டதன் காரணமாக, அவர்கள் தப்பித் தவறி வோட்டுச் சாவடியின் பக்கத்தில் தேர்தல் காலங்களில் சென்று விட்டாலோ, அவர் களை மணியக்காரர்கள் கணக்குப்பிள்ளைகள் வீடு வரையில் துரத்திக் கொண்டு போகும் நிலைமை தேர்தலுக்கு நின்றவர்களுக்குத் தெரிந் திருக்கும். பட்டாதார்களுடைய பெயர்கள் கூட விடப்பட்டு வோட்டுப்பதிவு செய்யப்படாமல் போய்விடுகிறது. ஆகவே, விவசாயிகளின் வீடுகளுக்கு இரவு 7 மணியிலிருந்து இரவு 9 மணிக்குள்ளாகவும், ஆலைகளில் வேலை செய்பவர்களுடைய வீடுகளுக்கு ஞாயிற்றுக்கிழமையும் சென்று அவர் களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டு, வாக்காளர் பட்டியல் தயா ரித்தால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, இந்த விதியின் கீழ் எப்படி வோட்டர்கள் ஜாப்தா தயார் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், அதிலே இருக்கும் பல குறைகளைப் பற்றியும் இங்கு எடுத்துரைக்கப்பட்டது. இப்பொழுது பஞ்சாயத்துக்கு என்று தனியாக வோட்டர்கள் ஜாபிதா கிடையாது. தேசம் முழுவதற்குமே வோட்டர்கள் ஜாபிதா தயார் செய்வதற்கு பீபிள்ஸ் ரெப்ரஸென்டேஷன் ஆக்ட் பிரகாரம் எலெக்ஷன் கமிஷனுக்குத்தான் இந்தப் பொறுப்பைக் கொடுத்திருக் கின்றோம். அந்த எலெக்ஷன் கமிஷன் செய்கின்ற முறையிலே அந்தந்த ராஜ்ய சர்க்கார்கள் வோட்டர்கள் ஜாபிதாவைத் தயார் செய்கின்றார்கள்.

அதிலே இருக்கும் பல குறைகளை நானும் உணருகிறேன். நான் தேர்தலுக்கு நின்ற போதும் வோட்டர்கள் ஜாப்தா எப்படி இருக்கிற தென்று அறிந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியின் வோட்டர் ஜாப்தா மட்டுமல்ல, எல்லா வோட்டர் ஜாப்தாக்களையும் ஓரளவு பரிசீலனை செய்தும் பார்த்திருக்கிறேன். முக்கியமாக சென்னை நகர வோட்டர் ஜாப்தா வைப்பற்றி சென்ற பொதுத் தேர்தலில் பல புகார்கள் வந்ததன் காரமாக

நானே பரிசீலனை செய்யவேண்டிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவ்வளவு குறைகளுடன் எப்படித் தேர்தல் நடந்தது என்றுகூட ஆச்சரியப் பட வேண்டியதாக இருந்தது. அந்தக் குறைகளை இப்பொழுது நீக்குவ தற்காக அதை ஓரளவு பரிசீலனை செய்து, தகுந்த யோசனைகளை எலெக் ஷன் கமிஷனுக்கும் சொல்லி குறைகளைக் கூடிய சீக்கிரத்தில் நீக்குவதற்கு எல்லா முயற்சியும் செய்யப்படும் என்பதை மட்டும் நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே, தேர்தலிலே எல்லோரும் நல்ல முறையிலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமானால் இந்தச் சட்டங்களெல்லாம் நல்ல முறையில் அமுல் நடத்தப்படவேண்டும். சட்டங்களை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கான முறையில் மக்கள் எல்லோரும் ஒத்துழைத்து நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும். ஆனால், சில சமயங்களில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதையும் நாம் பல நேரங்களில் பார்க் கின்றோம். ஏனென்றால், பல இடங்களில் எதிர்பாராத அளவு, எண்ண முடியாத அளவு, திடீரென்று வோட்டர்கள் உற்பத்தியாகிவிடுகின்றார்கள் பத்தாயிரக் கணக்கிலே. இப்பொழுது முனிசிபல் தேர்தல் வருகின்றது என்ற காரணத்தினால் பல இடங்களில் 10 ஆயிரம், 12 ஆயிரம் என்று புதிய வோட்டர்கள் தங்களுடைய பெயர்களை ஜாப்தாவில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறார்கள். எப்படி விண்ணப்பித்துக் கொண்டார்கள் என்றுகூட நம்பமுடியாத நிலைமையிலே ஏற்பாடு நடந்திருக்கிறது. சில அரசியல் கட்சிகள், பக்கத்திலே இருக்கும் கிராமத்திலே இருக்கின்றவர்களைக்கூட, ஏதோ ஒரு நம்பரைக் கொடுத்து, அச்சடித்த பாரங்களிலே அவர்களுடைய கையெழுத்தை வாங்கி, பல நகரங்களிலே கொடுத்திருக்கின்றார்கள் என்ற புகாரும் சர்க்காருக்கு வந்திருக்கிறது. அதிலும் அரசியல் கட்சிகள் நாணயமாக நடந்துகொள்ளு வதற்கு, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்குப் பதிலாக, அவைகளே இப்படி சட்டத்திலே குறுக்கு வழி கண்டுபிடிப்பதற்கு முன் வருமேயானால், பிறகு சாதாரண மக்களைப்பற்றி என்ன குறை கூற முடியும்? ஆகையால், அரசியல் கட்சிகள் இதிலே பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டியது மிக மிக அவசியம். ஏதோ நான் எந்த ஒரு அரசியல் கட்சியைப்பற்றியோ குறை கூறுகிறேன் என்று ஒவ்வொரு வரும் தங்களைப்பற்றி நினைத்துக்கொள்ள வேண்டாம். ஆனால், அப்படிச் செய்த அரசியல் கட்சிக்கு மட்டும் தங்களைப்பற்றிச் சொல்கிறோம் என்று கட்டாயமாக அவர்களுக்குத் தெரியும் என்று நான் உணருகிறேன். அதிலும் முக்கியமாக, இதுபோன்ற சட்டங்களிலே அரசியல் கட்சிகள் நியாயமாக நடந்து கொள்ளுவதற்கு ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டுமேயொழிய, அவர்களே சட்டங்களைப் புறக்கணிக்க ஆரம்பிப் பார்களானால், சட்டங்களிலே குறுக்கு வழி கண்டுபிடிக்க ஆரம்பிப்பார் களானால், மேலும் மேலும் லஞ்சத்தைப்பற்றியோ ஊழல்களைப்பற்றியோ மற்றவர்களைப்பற்றி சட்டசபையிலோ மற்ற இடங்களிலோ பேசி என்ன பிரயோஜனம்? நாம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்காமல், மற்ற துறைகளிலே நாம் ஓரளவுக்கு குற்றங்கள் செய்ய ஆரம்பிக்கும்போது மற்றவர்கள் பத்து மடங்கு செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆகையால், அரசியல் கட்சிகளுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது, இந்தச் சட்டங்களை அமுல் நடத்துவதிலே. அதிலும் முக்கியமாக வோட்டர்கள் ஜாப்தா சம்பந்தமாகவும் அவர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு, இந்த முறையிலே மக்களுடைய ஒத்துழைப்பு இருக்கிற வரையிலும், அரசியல் கட்சிகளுடைய நியாயமான ஒத்துழைப்பு இருக்கிற வரையிலும், இந்தச் சட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்ற முடியும் என்று தெரிவித்துக்கொண்டு, இப்பொழுது நான் கொடுத்திருக்கும் திருத்தத்துடன் இந்த விதியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

The amendment was put and carried.

Clause 20, as amended, was put and carried.

Clauses 21 and 22 were put and carried.

25th September 1958]

Clause 23.

MR. SPEAKER : The motion is—

' that clause 23 *do* stand part of the Bill.'

Is the hon. Member Mr. Lazer moving his amendment?

SRI S. LAZAR : I have given notice of quite a number of amendments, and they have been accepted by the Government. Therefore, the Hon. Speaker may take it that I am not moving any of my amendments.

MR. SPEAKER : I cannot accept such an omnibus statement from the hon. Member. Whenever I call the hon. Member's amendment he must stand up and say that he is not moving the amendment.

SRI T. S. RAMASWAMY PILLAI : I move—

' In Sub-clause (2), *for* the words " to the Government ", *substitute* the words " to the prescribed judicial authority ".'

MR. SPEAKER : The amendment falls through for want of a seconder.

Clause 23 was put and carried.

Clause 24.

MR. SPEAKER : The motion is—

' that clause 24 *do* stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In clause 24, after the words ' Indian Penal Code ' *insert* ' (Central Act XLV of 1860) ' and *omit* ' or for such shorter period as the court may by order determine."

The amendment was put and carried.

Clause 24, as amended, was put and carried.

Clause 25.

MR. SPEAKER : The motion is—

' that clause 25 *do* stand part of the Bill '.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In the clause, in sub-clause (1), *omit* ' to transportation or ', ' other than an offence not ' and the proviso."

The amendment was put and carried.

Clause 25, as amended, was put and carried.

[25th September 1958

Clause 26.

MR. SPEAKER : The motion is—

'That clause 26 *do* stand part of the Bill.'

SRI A. GOVINDASAMY : Sir, I move—

'*Omit* the proviso to item (*a*).'

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

'In the clause—

(*a*) *Omit* the proviso to item (*a*), and

(*b*) at the end of item (*j*), *add* the following, namely—

and (IV) the Panchayat or Panchayat Union Councils condones the absence on sufficient and reasonable grounds'.

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

'*After* clause (iii) of the proviso to item (j), *add* ' or (iv) he was absent due to illness.'

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, my amendment is the same as that of the hon. Member Sri Govindasamy. I accept his amendment.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு அங்கத்தினர் தொடர்ச்சியாக மூன்று மாத காலத்திற்கு கூட்டத்திற்கு வராவிட்டால் அவரை டிஸ்க்வாலிபை செய்யலாம் என்று இந்த விதி கூறுகிறது. தொடர்ச்சியாக அவர் வராததற்கு வியாதி போன்ற காரணம் இருக்கலாம். ஆகவே, வியாதியின் காரணமாக கூட்டத்திற்கு வர இயலா விட்டால், அதற்கு மட்டும் விதி விலக்கு அளிக்கவேண்டும் என்ற முறையில் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

12-30 p.m. SRI M. S. SELVARAJAN: ஸார் மெம்பராக வாக்குரிமையோடு வந்திருக்கக்கூடியவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள் பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கோ செலுத்த வேண்டிய தீர்வை பாக்கியிருந்தால் அதன் காரணமாக அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு சட்டரீதியாக இந்த ஷரத்தில் வழி செய்திருக்கிறோம். அநுபவத்தில் ஒரு நிர்வாக அதிகாரி நினைத்தால் ஒரு பஞ்சாயத்து தலைவரையே அந்த மிகச் சங்கடமான நிலைமைக்கு உள்ளாக்கிவிடுவதற்கும், பதவியிலிருந்து விலக்கப் படுவதற்கும் காரணமாக செயல்பட முடியும். இப்படிப் பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அங்கத்தினரைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை. பாக்கிக்காக சம்மன் சர்வு செய்வது பாக்கியைக் கட்டிவிடவேண்டுமென்று நோட்டீஸ் அனுப்புவது என்பதில் சம்பந்தப்பட்டவர்களிடம் நேரில் கொடுத்துக் கையெழுத்துப் பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்று இல்லை. அவர் வீட்டில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நேரிடையாகக் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் பில் கலெக்டர் அவர்களுக்கு சம்மன் சர்வு செய்திருப்பதாகக் குறிப்பு எழுதிக்கொண்டு அதில் எக்ஸிக்யூடிவ் ஆபீசருடைய கவுண்டர் சிக்னேசர் இருந்துவிட்டால் போதும் என்றும் திட்டவட்டமாக விதிகளில் எழுதியிருக்கிறோம். இதனால் முன்பே பல விதமான சிரமங்கள் எழுந்திருக்கின்றன. அதுவும் தலைவராகத் தேர்ந்

25th September 1958] [Sri M. S. Selvarajan]

தெடுக்கப்பட்டிருக்கிற நபர் லட்சாதிபதியாக இருந்தாலும் நான்கணா, பத்தணா பாக்கி செலுத்த வேண்டும் என்பதற்காகப் பதவியை இழந்திருக்கிற அவல நிலை பலவற்றுக்குச் சரித்திரம் இருக்கிறது. ஆகவே இதுபோன்ற கஷ்டத்திற்கு இந்த ஷரத்தும் ஆளாக்கிவிடாதிருக்க—இந்தக் குற்றத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் தள்ளிவிடுவதற்கு எப்படியெல்லாம் முடியுமோ அப்படிச் செய்யவேண்டுமென்ற கண்ணோட்டத்தோடு இந்த விதியைச் சரிவர அமைக்க வேண்டியது அவசியம். அதற்காக உரிய விதியைச் செய்ய வேண்டும். பாக்கியிருப்பது உண்மையானால்—சம்பந்தப்பட்டவருடைய கவனத்திற்கு நேரிடையாகக் கையெழுத்து மூலம் கொண்டு சென்று கையெழுத்துப் பெற்று அதை வசூலிப்பதற்கு வேண்டிய வழிவகையைச் செய்துவிட்டு அதற்காகப் பதவியை இழப்பது என்கிற நிலையைத் தவிர்க்க விதியைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்யப்படும் என்றும் நம்புகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் செல்வராஜன் அவர்களுக்கு இந்த விதி எதற்காக ஏற்பட்டு இருக்கிறதென்று சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்தில் பொறுப்பேற்று இருக்கக் கூடியவர்கள் சரிவர வரி கட்டுவதில் எந்தவிதமான தயக்கமோ, தாமதமோ காட்டக் கூடாது. இவர்களே அப்படிச் செய்தால் மற்றவர்களிடமிருந்து வரிப் பணத்தை வசூல் செய்வதில் தயக்கம், தாமதம் எல்லாம் உண்டாகி விடலாம். இவர்களே தகுந்த காலத்தில் வரி செலுத்தவில்லையென்றால் மற்றவர்கள் தகுந்த காலத்தில் இந்த வரியைச் செலுத்த வேண்டுமென்று சொல்வது வேடிக்கையாகப் போய்விடும். ஆகவேதான் இந்த ஷரத்து போடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கனம் அங்கத்தினர் தெரிவித்துக் கொண்டபடி இந்த விதி துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருப்பதற்குத் தகுந்த வகையில் இந்த மசோதாவின் அடிப்படையில் விதிகளை அமைக்கும் போது அதற்கு வேண்டிய விதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

The amendment of Sri A. Govindasamy was put and carried.

The amendment of Sri T. S. Ramaswamy Pillai was, by leave, withdrawn.

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

Chairman of any panchayat union council '."

Clause 27

DEPUTY SPEAKER : The motion is—

' That clause 27 *do* stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

' In sub-clause (1), *omit* " or the disqualification caused by the sentence is removed by an order of the Government ".'

Sir, it is only a consequential amendment.

The amendment was put and carried.

Clause 27, as amended, was put and carried.

Clauses 28 and 29 were put and carried.

Clause 30.

DEPUTY SPEAKER : The motion is—

' That clause 30 *do* stand part of the Bill.'

SRI A. GOVINDASAMY : Sir, I move—

' *For* the clause, *substitute* the following, namely :—

" The President shall be elected by the voters of respective panchayat and the Vice-President shall be elected by the panchayat from among its members in accordance with such procedure as may be prescribed ".'

SRI M. SELVARAJ : Sir, I second it.

DEPUTY SPEAKER : I think the hon. Member, Sri Lazar, is not moving his amendment.

SRI S. LAZAR : Sir, I am moving my amendment.

DEPUTY SPEAKER : But the hon. Member has already told the House that he is not moving any more amendments.

SRI S. LAZAR : But I do not find a Government amendment on this subject. So, I move—

' In the clause, *for* the words " The president and vice-president " *substitute* the words " The president and the vice-president ".'

SRI N. MAHALINGAM : Sir, I second it.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

' *For* the clause, *substitute*, the following namely :—

" 30. (1) The president shall be elected directly by the voters in the panchayat in accordance with such procedure as may be prescribed;

(2) The vice-president shall be elected by the panchayat from among its members in accordance with such procedure as may be prescribed ".'

SRI N. MARUDACHALAM : Sir, I second it.

DEPUTY SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

SRI A. GOVINDASAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நேரிடையாகப் பஞ்சாயத்துத் தலைவர் மக்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற முறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் சிறந்த முறையில் வாதாடியிருந்தாலும் இருக்கிற யாதார்த்த நிலைமையைப் பார்க்கிறபோது பல சங்கடங்கள் அதனால் உண்டாகின்றன. தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கிற உரிமையை மக்களுக்கு இதே சர்க்கார்தான் ஏற்கெனவே வழங்கியிருந்தது. ஆனால் மீண்டும் அந்த உரிமையைப் பறித்துவிட்டதனால்தான்—அதுவும் இந்த மசோதாவிலும் பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்து அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று செய்வதனால்

25th September 1958] [Sri A. Govindasamy]

இது சரியல்ல. மக்களாலேயே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலைமையை உண்டாக்கவேண்டும் என்பதை வலியுறுத்த நான் இந்தத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இப்போது இந்த அரசாங்கம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எங்கள் கருத்து நாளடைவில் கவனித்து ஏற்றுக்கொள்ளப்படுகிற நிலைமைக்கு வரலாம் என்கிற காரணத்தினால் அந்தக் கருத்தையே வலியுறுத்துகிற அளவுக்கு இந்தத் திருத்தத்தை மீண்டும் வலியுறுத்தி நான் முடித்துக்கொள்கிறேன்.

* **SRI M. S. SELVARAJAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் பஞ்சாயத்து வாக்காளர்களைக் கொண்டு நேரிடையாகவே நடத்தப்படவேண்டுமென்பது ஸ்ரீ கோவிந்தசாமியினுடைய வாதம். வாக்காளர்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டு, நேரிடையாகத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இப்போது நாம் செய்திருக்கிறோம். இதுவும் கூட ஒரு வகையில் நேரிடையாக வாக்காளர்களைக் கொண்டு தேர்ந்தெடுப்பதற்கு ஒப்பாகும் என்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலுக்கு ஒருவர் நேரிடையாக மக்களிடத்தில் வோட்டு வாங்கவேண்டும்—என்பதைப் போலவே வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடத்தில் வோட்டு வாங்க வேண்டும் என்று சொல்கிறோம். இது கூடாது என்றால் என்ன பொருள்? வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களிடத்தில்—மக்கள் தங்களுடைய வோட்டுகளை இவருக்குத்தான் கொடுப்போம் என்று நம்பிக்கை வைத்து அனுப்பி உள்ளவர்களிடத்தில்—மக்கள் தாங்களே தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிற அவர்களுடைய பிரதிநிதியிடத்தில் நமக்கு நம்பிக்கை இல்லையென்றாகிறது. இது மக்களிடத்திலேயே நம்பிக்கை இல்லை என்று சொல்லுவது போலவே ஆகிறது. ஜனங்களிடத்தில் வைக்கிற நம்பிக்கை ஜனங்களுடைய பிரதிநிதிகளிடத்தில் வைக்கவில்லை என்பதுதான் கருத்து. இது சரியல்ல. ஜனங்களுடைய அன்புக்குப் பாத்திரமாக சுமார் 700, 800 பேர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற நூற்றுக் கணக்கான அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற நபர் சிறந்த முறையில் பஞ்சாயத்து அங்கத்தினராகப் பணியாற்றுவதற்குத் தகுந்தவராகத்தான் நூற்றுக்குத் 99 பேர்கள் இருப்பார்கள். அத்தகையவர்களிடத்தில் நம்பிக்கை வைப்பதில் என்ன பங்கம் உண்டாகும் என்று என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. நேரிடையாகத் தலைவர் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யாதது தவறு என்று எண்ணக் கூடியவர்கள் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை அவசியம் நேரிட்டால் நம்பிக்கை இல்லையென்று கொள்வதற்கு உள்ள ஷரத்து வைத்துக்கொள்ளலாம் என்று பலதரம் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய ஆலோசனை சொல்பவர்கள் ஒரு விஷயத்தைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் சொல்வேன். பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுப்பவர்கள், அவரைத் தேர்ந்தெடுத்தவுடன் அவர்களுடைய கடமை தீர்ந்துவிட்டதென்று நினைக்கக்கூடாது. அந்தத் தலைவர் தம் தேர்தலுக்கு முன்பு உறுப்பினர்களை ஊர் விட்டு ஊர் மாற்றிவைத்திருப்பாரானால், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மறு நாளே அந்த உறுப்பினர்களைக் கொண்ட அவரைப் பதவியிலிருந்து நீக்கச் செய்ய முடியாதா? இதைப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் செய்ய முடியாதா? இதைச் சிந்திக்க வேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பகிரங்கமான தேர்தல் முறை இல்லாமல் ரகசியத் தேர்தல் முறை—வோட்டுப் பெட்டித் தேர்தல் முறை—இருக்கும்போது அபேட்சகரால் கடத்தப் பட்டவர்களும்கூட அவர்கள் இஷ்டப்படி வாக்களிக்க முடியும்; அப்போது தேர்தலில் நியாயமான முடிவே ஏற்படும். எனவே இந்தப் பிரிவில் அரசாங்கத்தின் நிலை சரியானது என்றே நான் நினைக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1950-ம் வருஷப் பஞ்சாயத்து போர்டு சட்டத்தில், பஞ்சாயத்து போர்டு தலைவர் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று கூறப் பட்டிருந்ததோ, அதே முறையில் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத்தான் என் திருத்தம் வகை செய்கிறது. அதாவது பஞ்சாயத்து

வாக்காளர்களால் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதுதான் என் திருத்தத்தின் நோக்கம். பஞ்சாயத்துத் தலைவரை அவ்வாறு தேர்ந்தெடுப்பது மிக மிக சுலபம். அகில இந்திய ரீதியில் இம்மாதிரியாகத் தேர்தல் நடத்துவதில் கஷ்டங்கள் இருக்கும். உதாரணமாக, ஜனாதிபதியை அகில இந்திய ரீதியில்—இந்த முறைப்படி—தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், அதில் கஷ்டங்கள் இருக்கும். ஒரு பஞ்சாயத்தில் சுமார் 5 அல்லது 8 அல்லது 10 அல்லது 18 உறுப்பினர்கள் தான் இருப்பார்கள். அப்படி இருக்கும்போது அவர்களால் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால், அப்போது பண வசதி படைத்த ஒரு சிலர் உறுப்பினர்களுக்கு 50 ரூபாயோ 100 ரூபாயோ பணம் கொடுத்து அவர்களுடைய ஓட்டுக்களை விலைக்கு வாங்கி, தலைவர்களாக வந்துவிடுவார்கள். உறுப்பினர்கள் குறைவாக இருப்பதால் இதற்காக அவர்கள் செலவழிக்க வேண்டிய பணம் மிகக் குறைவானது. எனவே அவர்கள் பணம் கொடுத்துத் தலைவராக வருவது மிகச் சுலபம். இது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

கிராம ராஜ்யம் என்பது விவசாயிகளையும் தொழிலாளர்களையும் கொண்ட இடம் என்று மகாத்மா காந்திஜீ சொன்னார். பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர், அங்குள்ள அப்பேர்ப்பட்ட மக்களை மதிக்கக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது குறித்து மசோதாவிலுள்ள விதியானது, அந்த நிலைமையை ஏற்படுத்தக் கூடியதாக இல்லை. என்னுடைய திருத்தம் அந்த நிலையை ஏற்படுத்தும். அதாவது, பஞ்சாயத்து வாக்காளர்களால் அவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்தால், அப்போது அவர் பஞ்சாயத்து மக்களை மதித்து வீடு வீடாக வந்து அவர்களிடம் ஓட்டுக் கேட்பார். மசோதாவிலுள்ள விதி நிறைவேற்றப்பட்டால் அபேட்சகர் " பஞ்சாயத்து உறுப்பினர்களுக்குப் பணத்தை கொடுத்து ஓட்டை விலைக்கு வாங்கிவிடலாம் " என்று கருதி அவ்வாறு செய்யும் நிலைமை ஏற்படும்; அந்த நிலையில் ஜனநாயகம் சரிவர இயங்காது. எனவே கிராம ராஜ்யமாக இருக்க வேண்டிய பஞ்சாயத்தில் பஞ்சாயத்துத் தலைவர் வாக்காளர்களால்—மக்களால்—தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **Sri S. NAGARAJA MONIGAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறையை, அதாவது நேரடித் தேர்தல் முறையை, நாங்கள் கோரினோம். அதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பின்னர் சர்க்கார் திருந்துவார்கள் என்று ஒரு அங்கத்தினரால் இச் சபையில் பேசப்பட்டது. அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. 1950-ம் வருஷம் பஞ்சாயத்து போர்டு சட்டம் கொண்டுவரப்பட்ட போதே அரசாங்கம் நேரடித் தேர்தல் முறையைச் சட்டத்தில் புகுத்தியது. எனவே, இந்தச் சர்க்காருக்குத் தீவிரமான சட்டத்தை இயற்றும் எண்ணமோ, மக்களுக்கு அதிகாரம் வழங்கும் எண்ணமோ இல்லை என்று சொல்வது தவறு. 1950-ம் வருஷப் பஞ்சாயத்து போர்டு சட்டத்தில் புகுத்தப்பட்ட நேரடித் தேர்தல் முறை நடைமுறையில் எவ்வாறு இருந்தது என்பதை சர்க்கார் கவனித்தது. சர்க்கார், அதைக் கவனித்த பிறகு இரண்டொரு காரணங்களுக்காக அந்த முறையை மறைமுகத் தேர்தல் முறையாக இப்போது மாற்றுகிறது. " அந்த முறையை இப்போது மறைமுகத் தேர்தல் முறையாக மாற்றுவோம்; பின்னர் வேண்டுமானால் மறுபடியும் நேரடித் தேர்தல் முறையைக் கொண்டுவருவோம் " என்ற எண்ணத்துடன்தான் சர்க்கார் அந்த முறையை இப்போது மாற்றுகிறார்கள். எனவேதான், சர்க்கார் வகுத்திருக்கும் விதியை நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். மேலும், பஞ்சாயத்து உறுப்பினர்களால் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்போது தேர்தல் எப்படி நடக்கிறது என்பதையும், மற்ற விஷயங்களையும், ஒரு தேர்தலின்போது மக்கள் கவனித்துப் புரிந்துகொண்டால், அடுத்த தேர்தலில் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் தயாராவார்கள்; அதாவது, அதற்குத் தகுந்த

25th September 1958] [Sri S. Nagaraja Monigar]

தேர்ச்சியைப் பெறுவார்கள். அந்தக் கண்ணோட்டத்துடனும் இந்த விதியை நாம் வரவேற்க வேண்டும். மறைமுகத் தேர்தல் முறை இருக்கும் போது பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்கள் பஞ்சாயத்து உறுப்பினர்களைத் தேர்தலுக்குச் சில நாட்கள் முன்பு தூக்கிக்கொண்டுபோய் வேறு ஊர்களில் வைத்துவிடுகிறார்கள் என்றும் தேர்தலின் போதுதான் அவர்களைப் பஞ்சாயத்திற்குத் திருப்பிக் கொண்டு வருகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. உறுப்பினர்களைத் தூக்கிக் கொண்டு போகிறவர்களும் தமிழர்கள்தான், தூக்கிச் செல்லப்படும் உறுப்பினர்களும் தமிழர்கள்தான். ஆகவே தமிழ் நாடு இன்று இப்படி இருக்கிறது. தமிழ் நாடு இன்று இப்படி இருக்கும்போது, பச்சைத் தமிழில் "நாம் தமிழர்கள்" என்று சொல்லிக்கொண்டு சும்மா, இருப்பதில் பிரயோஜனம் இல்லை. தமிழர்கள் சீர்திருந்த வேண்டும். மறைமுகத் தேர்தலில் மக்களுக்கு ஏற்படும் அனுபவங்கள், நேரடித் தேர்தல் முறை வந்த பிறகு அவர்கள் நன்றாக இயங்குவதற்குரிய தேர்ச்சியை அவர்களுக்குக் கொடுக்கும் என்பதை நாம் உணரும்போது, சர்க்காருக்கு இவ்விஷயத்தில் தீய எண்ணம் இருப்பதாக நாம் சொல்ல முடியாது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே அதி தீவிரமான கடன் சமரசத் திட்டத்தை சி. ஆர். சர்க்கார் கொண்டுவந்தது. எத்தனையோ வருஷங்களுக்கு முன்பே மது விலக்குச் சட்டத்தையும் ஆலயப்பிரவேசச் சட்டத்தையும் காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்திருக்கிறது.

DEPUTY SPEAKER: This is not relevant to the clause under discussion. The hon. Member will therefore kindly resume his seat.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர்களைப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. எனக்குத் தெரிந்த வரையில் 1950-ம் வருஷப் பஞ்சாயத்து போர்டு சட்டம் வந்த பிறகு அனேக இடங்களில் பலவிதமான குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முக்கியமாக, சில இடங்களில் இம்மாதிரி இல்லாத காரணங்களால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் பொறுப் புள்ளவர்களாக—பொறுப்புணர்ச்சியுடன்—நடந்துகொள்ளவில்லை என்பது தான் என் அபிப்பிராயம். உதாரணமாக, ஒரு வார்டில் ஏதாவது தேவை ஏற்படும்போது, உறுப்பினர்கள் பஞ்சாயத்துத் தலைவரிடம் சென்று விஷயங்களைச் சொன்னால், அவர் அதைக் கேட்பதில்லை. இக் காரணத்தால் பலவிதக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. சில வார்டுகளில் வேலைகள் நன்றாக நடப்பதில்லை. உறுப்பினர்கள் தலைவரிடம் சென்று ஏதாவது கேட்டால், "நான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன்; நான் உங்களுக்குக் கட்டுப் பட்டவன் அல்ல; நான் உங்களுக்கு ஜவாப்தாரி அல்ல" என்று சொல்கிறார். பஞ்சாயத்து உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். பஞ்சாயத்துத் தலைவரை அந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுதான் ஜனநாயக முறை. பஞ்சாயத்துத் தலைவர்மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை பஞ்சாயத்து உறுப்பினர்கள் கொண்டு வருவதற்கு மசோதாவில் வகைசெய்திருக்கிறோம். மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட தலைவர்மீது பஞ்சாயத்து உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது என்றால், அது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. கிராமப் பஞ்சாயத்தில் சுகாதார வேலைகளையும் மற்ற வேலைகளையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு பஞ்சாயத்து உறுப்பினர்களுடையதாக இருக்கவேண்டும். எந்தக் காரியத்தையும், அவர்கள் பஞ்சாயத்துத் தலைவரிடம் சொல்லி, செய்துமுடிக்கக்கூடிய நிலைமை பஞ்சாயத்தில் நிலவ வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்து உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் இது சாத்தியமாக இருக்கும். 1950-ம் வருஷத்திற்கு முன்பு இந்த முறை தான் இருந்தது. அப்போது பஞ்சாயத்துக்கள் நன்றாக இயங்கின எனவே, பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்து உறுப்பினர்களால் தேர்ந் தெடுக்கப்படுவதுதான் நல்லது; அவர் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டால்

[25th September 1958 [Sri V. K. Ramaswamy Mudaliyar]

தான் அவர் மீது உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதும் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது குறித்து ஸ்ரீ கோவிந்தசாமி சில கருத்துக்களை வெளியிட்டு தம் திருத்தத்தை வலியுறுத்தினர். பஞ்சாயத்துத் தலைவரை மக்கள் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது தீவிரவாதக் கொள்கை என்றும், அவரைப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கவேண்டு மென்பது மிதவாதக் கொள்கை என்றும் ஒரு சிலர் நினைப்பதுபோல் தோன்றுகிறது.

12-50 p.m. அது, தவறான கருத்து என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள் கிறேன். இதில் மிதவாதமோ, தீவிரமோ ஒன்றும் கிடையாது. நாம் ஏற்படுத்தும் அமைப்பு எந்த முறையில் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற முறையில், எப்படியிருந்தால் அதிகமான தகராறுகள் இல்லாமல் நடைபெறும் என்ற அடிப்படையில்தான் இதை முடிவு செய்ய வேண்டி யிருக்கிறது. முதலாவதாக, முடிவு செய்ய வேண்டியது பஞ்சாயத்து சபை பூர்ண அதிகாரம் பெற்ற சபையாக இருக்கவேண்டுமா, இல்லை தலைவர் பூர்ண அதிகாரம் பெற்றவராக விளங்கவேண்டுமா என்பதைப் பற்றி முதலில் முடிவு செய்யவேண்டும். பஞ்சாயத்துச் சபை பூர்ண அதிகாரம் பெற்றிருக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தால் தலைவரை பஞ்சாயத்து சபை ஏற்படுத்துவதுதான் சரி. பஞ்சாயத்து சபையை வெறும் ஆலோசனை மட்டும் கூறக்கூடிய சபையாக வைத்திருக்க வேண்டு மென்றால், அப்படி அதை வைத்து எல்லாவிதமான அதிகாரங்களும் தலைவருக்கு இருக்கவேண்டுமென்று முடிவு செய்தால் மக்கள் எல்லோரும் அவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்வது அப்பொழுது சரியாக இருக்கும். ஆகவே, அடிப்படையான ஒரு முடிவிற்கு வராமல் இரண்டையும் போட்டுக் குழப்புவது, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய குழப்பமான நிலைக்குத்தான், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், கொண்டு போய்விடும், என்பதை அனுபவ ரீதியில் பார்க்கிறோம். இன்னும் ஒருசிலர் நினைப்பது, மக்களே தலைவரைத் தேர்ந்தெடுப்பது அதிக ஜனநாயகம் என்றும், மக்கள் பிரதிநிதிகள் தலைவரைத் தேர்ந்தெடுப்பது கொஞ்சம் கம்மி ஜனநாயகம் என்ற கருத்தை தெரிவித்தார்கள். ஜன நாயகத்தத்துவத்தை உணராதவர்கள்தான் ஒன்று அதிக ஜனநாயகத்தை அடிப்படையாக கொண்டதென்றும், மற்றொன்று கொஞ்சம் கம்மி ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதென்றும் சொல்வார்கள். இன்னொரு சாரார், மக்களின் பேரில் நம்பிக்கையுள்ளவர்கள் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்க ஒப்புக்கொள்வார்கள் என்றும், மக்கள் பேரில் நம்பிக்கை இல்லாதவர்கள்தான் மக்களால் தலைவர் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று சொல்வார்கள் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் பேரில் நம்பிக்கை வேண்டுமென்று சொல்லும்போது அவர்களிடம் பூரண நம்பிக்கை இருக்க வேண்டும். நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுத்து அனுப்பவேண்டுமென்றுதான் இந்தப் பஞ்சாயத்து அமைப்பை ஏற்படுத்துகிறோம். நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் திறமை, அறிவு, தகுதி, இவைகள் மக்களுக்கு இருக்கின்றன என்ற முறையில்தான் பஞ்சாயத்துச் சபை ஏற்படுத்தி அதற்கான அங்கத்தினர்களை எல்லாம் மக்களே தேர்ந்தெடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். ஆகவே, மக்கள், நல்ல தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நம்பிக்கையும் ஆனால் பிரதிநிதிகளைப் பொறுத்தவரையில் நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள் என்ற அவநம்பிக்கையும் இருந்தால், யாருக்கு மக்கள் பேரில் அவநம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே, இதில் மக்கள் பேரில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்ற பிரச்னையே எழவில்லை. ஆகவே, சபைக்குத்தான் முழு அதிகாரமும் இருக்க வேண்டும், சபை செய்கிற முடிவுதான் சரி என்ற தீர்மானத்திற்கு வந்தால் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிற அமைப்பை ஒத்துக்கொள்ள

25th September 1958] [Sri C. Subramaniam]

வேண்டும். அமெரிக்காவில் இருப்பதுபோல், அங்கு ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவது போல் இங்கும் மக்கள்தான் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், பஞ்சாயத்துச் சபை ஒரு சாதாரண ஆலோசனை மட்டும் சொல்லக்கூடிய சபையாக இருக்கும்படி நேரிடும். ஆகவே, பஞ்சாயத்து சபைக்குத்தான் முழு அதிகாரமும் இருக்கவேண்டும், அவைகள் முடிவு செய்வதுபோல்தான் எல்லோரும் நடக்கவேண்டுமென்றுள்ள முடிவை ஒப்புக்கொண்டிருக்கும்போது தலைவரை அந்தச் சபைதான் தேர்ந்தெடுக்க வேண்டுமே தவிர மற்றவர்கள் தேர்ந்தெடுப்பது என்றால் அதன் நிர்வாகம் சீராக நடக்காது என்ற காரணத்திற்காக கோவிந்தசுவாமி அவர்களின் திருத்தத்தை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவர்களும், இப்பொழுது இதை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று இதைக் கொண்டுவர வில்லை. பிற்காலத்தில் யாராவது இதை ஒப்புக்கொள்வர் என்ற தூர நம்பிக்கையுடன் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இதை இப்பொழுது வலியுறுத்தாது அவர்களுக்குக் காலம் வரும்போது இரண்டையும் ஒட்டுப் போட்டுக்கொள்ளட்டும். நேற்று பத்திரிகையில் பார்த்தேன், ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் ஒரு ஜாதி நாயின் தலையை வெட்டி இன்னொரு ஜாதியின் உடம்பில் ஒட்ட வைத்து ஒரு புதிய மிருகத்தை சிருஷ்டித்திருக்கிறார் என்று. அதேபோன்று ஒரு ஜனநாயக அடிப் படையில் தலைவரைத் தேர்ந்தெடுப்பது, இன்னொரு ஜனநாயக அடிப் படையில் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது என்று இரண்டு ஜாதி களையும் பொருத்தமுடியுமென்ற காலம் வரும்போது அதை வலியுறுத்திக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : Sir, on a point of clarification.

DEPUTY SPEAKER : No point of clarification can be raised after the Hon. Minister has replied. I want to know whether the hon. Member is withdrawing his amendment or not.

SRI A. GOVINDASAMY : Sir, I press my amendment.

The amendment was put and lost.

DEPUTY SPEAKER : I think the Government have accepted the amendment of Sri Lazar.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the Government have accepted it.

The amendment was put and carried.

The amendment of Sri V. K. Kothandaraman was, by leave, withdrawn.

Clause 30 as amended, was put and carried

Clause 31 was put and carried.

Clause 32.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 32 *do* stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" In sub-clause (1), *omit* the words ' or as chairman or vice-chairman of any panchayat union council '."

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In sub-clause (1), *omit* ' as president or vice-president of any other panchayat or '."

DEPUTY SPEAKER : The clause and the amendments are now before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : 32-வது கிளாஸில் நான் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக நன்றி தெரிவித்த போதிலும் இந்த 32-வது க்ளாஸ் சப்-க்ளாஸ் 1-ல் ஒரு பஞ்சாயத்தில் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் மற்றொரு பஞ்சாயத்தில் தேர்ந்தெடுக்கக் கூடாதென்ற நிலை இருக்கும்போது, இதில் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை பஞ்சாயத்துக்களில் வேண்டுமென்றாலும் இருக்கலாம் என்றஅளவிற்குத்தான் அர்த்தப்படுத்துகிற நிலைமையில் இருக்கிறது. தலைவர் அல்லது உப தலைவர் யாராயிருந்தாலும் சரி, அவர்கள் இதர பஞ்சாயத்தில் தலைவராகவோ அல்லது உப தலைவராகவோ வரும்போது இன்னொரு பஞ்சாயத்திலும் அவர் மெம்பராக இருக்கிறார். ஆகவே, அவர் ஒரு பஞ்சாயத்தில்தான் இருக்கலாம் என்ற அர்த்தம் வரும்படி அதைக் கொண்டுவர வேண்டுமென்றுதான் நான் இதைச் சொல்லுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the Government amendment will meet all the requirements. Therefore the hon. Member Sri V. K. Kothandaraman need not press his amendment.

The amendment of Sri V. K. Kothandaraman was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 32, as amended, was put and carried.

Clause 33.

DEPUTY SPEAKER : The motion is—

That clause 33 *do* stand part of the Bill.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I move—

At the end of item (*b*), *add* the following, namely :—

1 p.m. ' and no official correspondence between the panchayat and the higher authorities shall be conducted except through the President. The President shall be bound to transmit communications addressed through him by the executive officer to the higher authorities or by the higher authorities to the executive officer.'

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

After item (*b*), in line 16, *insert* the following, namely :—

' (*c*) control all the officers and servants of the panchayat ' and *renumber* item (*c*) as item (*d*).

The amendment was duly seconded.

SRI A. GOVINDASAMY : Sir, I move—

After item (*c*), *add* the following, namely :—

' (*d*) shall send confidential reports of the executive officer to the Inspector and Government.'

The amendment was duly seconded.

25th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

Renumber clause 33 as sub-clause (1) of that clause and *add* the following as sub-clause (2) :—

'(2) No official correspondence between the panchayat and the Government shall be conducted except through the president. The president shall be bound to transmit communications addressed through him by the executive officer to the Government or by the Government to the executive officer.'

DEPUTY SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

* **SRI M. P. SUBRAMANIAM**: ஐயா, நான் கொடுத்திருக்கின்ற திருத்தத்தின் சராம்சத்தைக் கொண்டு சர்க்காரே ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் எக்ஸிக்யூட்டீவ் ஆபீஸர்களுக்கும் நடக்கக்கூடிய கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் பஞ்சாயத்துத் தலைவர் மூலமாகவே நடைபெறவேண்டும் என்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது மிகவும் வரவேற்கத் தகுந்த அம்சமாகும். நண்பர் கோவிந்தசாமி அவர்கள், எக்ஸிக்யூட்டீவ் ஆபீஸர்களைப் பற்றி ரகசிய ரிப்போர்ட் எழுதுவதற்குப் பஞ்சாயத்துத் தலைவருக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்றுள்ள திருத்தத்தை கொடுத்திருக்கிறார்கள், அதையும் ஒப்புக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். அதையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY: சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகின்ற எல்லாவிதமான கடிதங்களும் பிரஸிடண்ட் மூலமாகவே நடைபெறவேண்டும் என்பதைச் சர்க்கார் ஒத்துக்கொண்டிருப்பதற்குச் சர்க்காரை பாராட்ட விரும்புகிறேன். அதே சமயத்தில் எக்ஸிக்யூட்டீவ் ஆபீஸர்களின் பேரில் கான்பிடன்ஷியல் ரிப்போர்ட் எழுதுவதற்கும் வேண்டிய உரிமையை பஞ்சாயத்துத் தலைவருக்கு வழங்கவேண்டும் என்று நேற்றையதினம் நடந்த கூட்டத்திலும் சொன்னேன். அரசாங்கமும் அதை ஒத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். அதை இப்போது மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI N. K. PALANISAMI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் போதுமான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது தான் பிரச்னை. கிராம ராஜ்யம் என்ற அடிப்படையில் பார்த்தால், அரசியல் சட்டத்தின் 40-வது சட்டப் பிரகாரம் பஞ்சாயத்துகள் அமைக்கப்படும்போது அவைகள் தாங்களாகவே இயங்குவதற்குள்ள அதிகாரங்களைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரியான அதிகாரங்களைப் பஞ்சாயத்து நடத்துவதற்குக் கொடுக்கவேண்டும். '**To create rural leadership so that they may go up to Central Government**' என்றிருக்கிறது. அப்போது தான் தேச அபிவிருத்தி வேலைகள், தொழில் அபிவிருத்தி வேலைகள் எல்லாம் செய்ய முடியும். இந்த அதிகாரங்களைக் கொடுத்தால்தான் ரூரல் லீடர்ஷிப்பை தயார் செய்ய முடியும். இது தான் பஞ்சாயத்தின் அடிப்படையான கொள்கை. ஆனால் இன்றையதினம் எக்ஸிக்யூட்டீவ் ஆபீசர்களும் கமிஷனரும் சிப்பந்திகளை நியமிக்கவேண்டும் என்று சொன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இவர்கள் கையில் இந்த அதிகாரம் இருந்தால், எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்களும், கமிஷனர்களும் தங்களுக்குத் தகுந்த ஆட்களை எடுத்துவைத்துக்கொண்டு தங்கள் இஷ்டப்படி நிர்வாகத்தை நடத்தி வருவார்கள். எங்கள் பக்கத்தில் பெருந்துறை என்ற பஞ்சாயத்தில் அதன் தலைவரை நீக்கிவிட்டு தனக்கு வேண்டிய ஒரு ஆளை நியமித்துக்கொண்டார் அங்குள்ள எக்ஸிக்யூட்டீவ ஆபீசர். ஆகவே சிப்பந்திகளை நியமிக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்துத்

தலைவருக்குக் கொடுத்துவிட்டு பாக்கியுள்ள நிர்வாக அதிகாரங்களை வேண்டுமானால் இந்த அதிகாரிகள் வைத்துக்கொள்ளலாம். சிப்பந்திகளை நியமிக்கும் அதிகாரத்தையும், இவர்களை கண்ட்ரோல் செய்யும் அதிகாரத்தையும் பஞ்சாயத்துத் தலைவருக்குக் கொடுக்கவேண்டும் என்றுள்ள திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நண்பர் கோவிந்தசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தில் எக்ஸிக்யூட்டிவ் ஆபீசரின் பேரில் கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் தயார் செய்வதற்குத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான அதிகாரம் சட்டத்தில் கொடுப்பது கிடையாது. ரூல்ஸ்ஸாக வரும்போது இதைப்பற்றி ஆலோசனை செய்து வேண்டுமானால் அதில் சேர்த்துக் கொள்ளலாம். இதைச் சர்க்காரும் ஒத்துக்கொண்டிருப்பதால் சட்டத்தில் இம்மாதிரியான ஒரு விதியைச் சேர்த்தாக வேண்டுமென்றுள்ள திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்ததாக, நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தில் கோரியிருப்பதை சர்க்காரே இதற்கு வேறு முறையில் அமெண்ட்மெண்ட் கொண்டு வந்திருக்கிறது. ஆகையால் அந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நண்பர் பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தில் சிப்பந்திகளை நியமிக்கும் அதிகாரம் தலைவருக்குக் கொடுக்கவேண்டும் என்பது. நேற்றைய தினம் இதைப்பற்றி ஆலோசனை செய்து, இந்த அதிகாரத்தைத் தனிப்பட்ட ஒரு ஆளிடம் கொடுக்கவேண்டாம் இதற்கென்று ஒரு குழு ஒவ்வொரு பஞ்சாயத்துக் கவுன்ஸிலுக்கும் நியமித்து அவர்கள் மூலமாக நியமனங்களைச் செய்யவேண்டும் என்றுள்ள முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே இந்த முடிவை கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*SRI M. P. SUBRAMANIAM : Sir, on a point of clarification அமைச்சர் அவர்கள் கூறுகின்ற நேரத்தில் பஞ்சாயத்துக் கவுன்சிலுக்கு இம்மாதிரி ஒரு குழு நியமித்து அதன் மூலமாக நியமனங்களை நடத்தலாம் என்று தெரிவித்தார்கள். ஆனால் கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் பஞ்சாயத்தில் சிப்பந்திகளை நியமிக்கக்கூடிய அதிகாரம் தலைவருக்கு இருக்கவேண்டும் என்பது. நான் தெரிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால் பஞ்சாயத் போர்டுக்கு இம்மாதிரி குழு நியமித்து நியமனங்களை நடத்தக்கூடிய உரிமை அளிப்பது என்பது தானா? அல்லது பஞ்சாயத் யூனியன் கவுன்ஸிலுக்கு மாத்திரம் தான் இந்தக் குழு நியமித்து நியமனங்கள் நடத்தவேண்டும் என்பதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்களைப் போடுவது என்பதிலும் எல்லாப் பஞ்சாயத்துகளும் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்களைப் போட முடியாது. ஏனென்றால் அதற்கு வேண்டிய வருமானம் எல்லாப் பஞ்சாயத்துகளிலும் கிடைக்காது. அதிகாமாக வருமானம் இருக்கக்கூடிய பஞ்சாயத்துகளுக்கும் டௌன் பஞ்சாயத்துகளுக்கும் தான் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்கள் போடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் பெரிய பஞ்சாயத்துகளுக்கும் டௌன் பஞ்சாயத்துகளுக்கும் சிப்பந்திகளை நியமிக்கும் விஷயத்தில் ஒரு குழு போட்டு நியமனங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

The amendments of Sri M. P. Subramaniam, Sri N. K. Palanisami and Sri A. Govindasamy were, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 33, as amended, was put and carried.

25th September 1958]

Clause 34.

DEPUTY SPEAKER : The motion is—

That clause 34 *do* stand part of the Bill.

SRI A. GOVINDASAMY : Sir, I move—

In sub-clause (3), *for* the words ' shall devolve on a . . . behalf ', *substitute* the words ' shall devolve on a member of the panchayat elected among the members '.

The amendment was duly seconded.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I move—

In sub-clause (3).—

(i) *for* the words ' appointed by the Inspector in this behalf ' occurring in lines 35 and 36, *substitute* the words ' elected by the members of such panchayat '; and

(ii) *for* the word ' appointed ' occurring in lines 39 and 40, *substitute* the word ' elected '.

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

In sub-clause (3)—

(i) *for* the words ' if no member of the panchayat is available for such appointment ', in lines 36 and 37, *substitute* the words ' if no member is elected by the panchayat ', and

(ii) *for* the words ' appointed by the Inspector ' in line 38, substitute the words ' elected by panchayat '.

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI A .GOVINDASAMY : கனம் உப தலைவர் அவர்களே, தலைவரோ அல்லது உப தலைவரோ இல்லாத நேரத்தில் அங்கு இருந்து பணியாற்றுகின்ற மற்ற உறுப்பினர்களே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று திருத்தத்தில் கொடுத்திருக்கிறேன். அதைச் சக்கார் ஏற்றுக் கொள்வதில் பெரிய சங்கடம் ஒன்றும் இருக்காது என்று நம்புகிறேன். ஆகவே இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*SRI V. SANKARAN : சாதாரணமாக கமிஷனரும், எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸரும் இல்லாத நேரங்களில் சேர்மேனுக்கும் பிரஸிடண்டுக்கும் அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. இதிலே 35-வது பிரிவில் சேர்மனோ, பிரஸிடெண்டோ தன்னுடைய அதிகாரங்களை மற்றொரு அங்கத்தினருக்கு கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் விசாரணை செய்யும் அதிகாரம் கொடுத்துவிட்டு இந்த அதிகாரம் மாத்திரம் இதில் ஏன் கொடுக்கக்கூடாது என்பது தெரியவில்லை. இதை நாம் ஒத்துக்கொண்டிருக்கிறபோது மற்ற அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை ஏன் நியமிக்கக் கூடாது. ஆகவே இதை அந்த முறையில் மாற்றிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1-10 p.m. *SRI M. P. SUBRAMANIAM: ஐயா, இந்தப் பிரிவின் கீழ், பஞ்சாயத்துத் தலைவர்கள் 30 தினங்களுக்கு மேற்பட்டு அந்தப் பிரதேசத்தில் இருக்க முடியாமல் வெளியிடம் சென்றிருந்தாலும் அல்லது வேலை செய்வதற்குச் சக்தியற்றவராயிருந்தாலும், அந்த நேரத்தில், பஞ்சாயத்து மெம்பராக இல்லாத ஒருவரைக் கூட இன்ஸ்பெக்டர் நியமிக்கலாம் என்று விதி இருக்கிறது. என்னுடைய திருத்தம், பஞ்சாயத்து போர்டு மெம்பர்களே ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பது. 30 நாட்களுக்கு மேற்பட்டு வராமலிருந்தால், அந்த வேலைகளைச் செய்வதற்காக ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் பெரும் செலவு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. எலெக்ஷன் என்று இருந்தால் கஷ்டமாக இருக்குமென்று கருதினால், "சோஸன்" என்று வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

DEPUTY SPEAKER: Then, who is to call for the meeting?

SRI M. P. SUBRAMANIAM: The vice-president can call for the meeting. (Interruption.) If that too is not possible, the members themselves can call for the meeting.

DEPUTY SPEAKER: How?

SRI M. P. SUBRAMANIAM: I think there is a statutory provision even now that, if a specified number of members send a written requisition a meeting of the board shall be convened.

ஆகையால் இந்த இன்ஸ்பெக்டர் அவர்களிலிருந்து ஒரு மெம்பரை நியமிக்கலாம் என்பதை விட, இரண்டு பேரும் இல்லாத நேரத்தில், பஞ்சாயத்து போர்டைக் கூட்ட நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் கொடுக்கலாம். இல்லையென்றால், 3 பேர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் கூட்டத்தைக் கூட்டலாம். இப்படி ஒரு திருத்தம் செய்வதினாலே பாதகம் ஏற்பட்டு விடப்போவதில்லை. இந்த அதிகாரம் இன்ஸ்பெக்டர் கையிலே இருக்கவேண்டும் மென்பதால் சர்க்காருக்குச் சாதகம் ஒன்றும் ஏற்பட்டு விடப்போவதில்லை. பஞ்சாயத்து போர்டு மெம்பர்களே ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று சட்டத்திலே வகை செய்தால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இதிலே, தலைவரும், உப தலைவரும், 30 நாளுக்கு மேல் இல்லை என்று சொன்னால், அதற்குப் பதிலாக வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று இருப்பதில், 30 நாள் என்றிருப்பதை 15 நாள் என்று மாற்றவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். இப்போது முனிசிபல் ஆக்டில் ஒரு சேர்மன் 15 நாட்களுக்கு மேல் குறிப்பிட்ட ஏரியாவில் இல்லையென்றால், அவருடைய அதிகாரத்தை வைஸ் சேர்மனாக இருக்கக்கூடியவருக்குக் கொடுக்கலாம் என்ற முறை இருக்கிறது. இப்படி 15 நாள் என்று இருக்கும்போது கூட 15 நாட்களுக்கு மேல் 20 நாளாக இருந்தாலும், 15 நாட்களுக்கு உட்பட்டு இருந்தது என்று ரெகார்டு செய்து வைத்துக்கொள்ளுகிறார்கள். சேர்மனுக்கும் வைஸ் சேர்மனுக்கும் ஆகவில்லை என்று இருந்தால், அந்தச் சேர்மன் ஊரில் இல்லாதபோது வைஸ் சேர்மன் தலைமைப் பதவியில் இருக்கவேண்டுமென்று டெலிகேஷன் கொடுக்க விரும்பவில்லை என்ற அடிப்படையில் பல விதமாக நடக்கிறது. 30 நாளுக்குப் பதிலாக 15 நாள் என்று இருந்தால் போதுமானது. ஆகவே, இதைக் கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI: ஸார், இந்த மாதிரியான சந்தர்ப்பம் எப்போதாவது தான் வரும். சில சமயத்திலே வராமலே இருக்கலாம். தலைவரும், உப தலைவரும் இல்லையென்றால், 3 பேர், 4 பேர், 5 பேர் அங்கத்தினர்கள் இருக்கலாம். அதற்கு அவர்களுக்குள் ஒருவரை, அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அப்படி ஒருவரும் இல்லையென்றால் அதற்கு வெளியிலிருந்து நாமினேட் செய்யலாம்

25th September 1958] [Sri T. S. Ramaswamy Pillai]

என்று இருக்கிறது. ஒரு விதி குறிப்பிடுகிறது, சிறிய பஞ்சாயத்து மாத்திரமல்லாமல், பெரிய பஞ்சாயத்துக்களில், கன்னியாகுமரி ஜில்லா வில் 10, 12 பேர்கள் இருக்கிறார்கள். ஆகையால் இம்மாதிரியான இடங் களில் இன்ஸ்பெக்டர் நியமிப்பதற்குப் பதிலாகத் தேர்தல் நடத்தி ஒரு வரைத் தேர்ந்தெடுத்து தலைவராகச் செய்வது நல்லது.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர் களே, இதிலே முடிவுக்கு வருவதிலே எந்த முடிவுக்கு வந்தாலும் அதிலே பிரமாதமான வித்தியாசம் இல்லை. There is no question of sentiment in this matter. எந்தச் சமயத்தில் இன்ஸ்பெக்டர் நியமனம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி நல்ல முறையில் பரிசீலனைசெய்து பார்த்து பிறகு அங்கத்தினர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் அதை மாற்றுவதிலே தப்பில்லை. "When the office of president is vacant, the vice-president shall exercise the functions of the president until a new president is declared elected and assumes office." அதனால், வைஸ் பிரஸிடெண்ட் இருக்கும்வரையில், பிரஸிடெண்ட் ஸ்தானம் காலியாக இருந்தாலும், இல்லையென்றாலும் கவலைப்படவேண்டியதில்லை. அடுத்த படியாக, "If the president has been continuously absent from jurisdiction for more than thirty days or is incapacitated, his functions during such absence or incapacity shall, except in such circumstances as may be prescribed devolve on the vice-president." எல்லாவிதமான அதிகா ரங்களும் வைஸ்-பிரஸிடெண்டுக்கு வந்து விடுகிறது.

"When the office of president is vacant or the president has been continuously absent from jurisdiction for more than thirty days or is incapacitated and there is either a vacancy in the office of vice-president or the vice-president has been continuously absent from jurisdiction for more than thirty days or is incapacitated, the functions of the president shall devolve on a member of the panchayat appointed by the Inspector in this behalf . . ."

இது முதலாவது.

". . . and if no member of the panchayat is available for such appointment by such person as may be appointed by the Inspector in this behalf."

அப்படி வரும்போது தான் என்ன செய்வது என்பதைப் பார்க்கவேண்டும். When the office of President is vacant என்று சொன்னால் அதற்கும் தேர்தல் நடக்கவேண்டியிருக்கிறது. தேர்தல் நடக்கும் வரையில் வைஸ்-பிரஸிடெண்ட் இருந்தால் பார்த்துக்கொள்ளலாம். அப்படி வைஸ்-பிரஸிடெண்ட் இல்லையென்றால், தேர்தலுக்கு முன்னால் ஒரு உப தேர்தல் வைக்கவேண்டுமென்றால், அதற்குத் தேர்தலையே நடத்தி விடலாமே? தேர்தல் வைப்பதற்கு நோட்டீஸ் அனுப்பி, மீட்டிங் கூப்பிட சில நாட்களாகும். வைஸ் பிரஸிடெண்ட் இல்லையென்றால் தேர்தல் நடத்தலாம் என்றால், அதற்குப் பிரஸிடெண்ட் தேர்தலையே நடத்திவிடலாம். குறுகிய காலமாக இருக்கும், அப்போது தேர்தல் நடத்த முடியாமல் இருக்கும், அப்போது இன்ஸ்பெக்டராகப் பார்த்து இன்ன ஆசாமி பார்த்துக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறாரோ அவர் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. தேர்தல் நடத்தலாம், இன்ஸ்பெக்டருக்குக் கொடுக்கவேண் டியதில்லை என்று சொன்னால், இது வரக்கூடியது "ரிமோட் பாஸிபிலிடி" தான். தாற்காலிமாக இன்ஸ்பெக்டரே நியமிக்கலாம், இதைப் பற்றிக் கவலைப்படாமல், ஜனநாயகத்திற்கும் இதற்கும் எந்த விதமான முரண் பாடும் இல்லையென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY: (மேலே பாருங்கள்) மேலே The member of the panchayat or the person so appointed (who shall be styled the temporary president) shall perform the functions of the president

subject to such restrictions and conditions as may be prescribed, until a new president or vice-president is declared elected and assumes office." ஒருவரும் இல்லை என்றால் என்ன செய்வது என்றெல்லாம் சட்டம் போடும்போது ஒரு காரியம் ஏற்படுமானால் எப்படிச் செய்யவேண்டும் என்று போட்டிருக்கிறது. ஒருவர் இருந்தால், வெளியிலிருந்து ஒருவரையும் போட முடியாது. அப்படி இருக்கும் போது இதிலேபோய் ஒரு உபதேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்வது சரியல்ல, இதை இப்படியே ஒத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI V. SANKARAN: 30 நாட்களுக்கு மத்தியில் வருவதால் இதை ஒரு உப தேர்தல் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. இது ஒரு இண்டரிம் அரெஞ்ச்மெண்ட். "சோஸன் பை மெம்பர்ஸ்" என்று போட்டு, மெம்பர்கள் தேர்ந்தெடுப்பது நல்லது.

DEPUTY SPEAKER: I think the Hon. Minister has already replied to those points. The hon. Member need not repeat them.

The amendments of Sri A. Govindasamy, Sri M. P. Subramaniam and Sri T. S. Ramaswamy were, by leave, withdrawn.

Clause 34 was put and carried.

Clause 35 was put and carried.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. on Saturday, the 27th September 1958.

The House then adjourned.

VI. —PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules, Orders and Notifications.

126. *Notification issued with G.O. No.* 2501, *Revenue, dated 8th July* 1958 *framing rules under section* 50 (5) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).

127. *Notification issued with G.O. Ms. No.* 2522, *Revenue dated 9th July* 1958 *enforcing the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 in the Inam *Estates specified in the schedule of the notification.*

B. Reports and other papers.

45. *The Madras Public Health (Amendment) Bill,* 1958 (*L.C. Bill No.* 6 *of* 1958).

46. *The Madras Panchayats Bill,* 1958.